
ஞாயிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642



# திராவிடநாடு

மலர் 3.] 17—12—44 [இதழ் 39.

## எது இசை?

★

(நிதிசால சுகமா? என்ற கிருதி மெட்டு)


[பாரதி தாசன்]

தமிழ் பாடல் முறையா, நாட்டிலே கண்
வாயை மூட்டல் முறையா?
எதுமுறை சொல்க மனமே!

தமிழ்பேசுவார்க்கு தீந்தமிழினிதோ
தாங்களறியாத் பிறமொழி பாடுதல் இனிதோ

மொழிபொருள் மிகநன்றுய்க் காட்டுதல் கவியா-தம்
விழிபல் உதடுகாணக் காட்டல் கவியா?

பிழைபட நிந்தனைபட நடப்பது நலமா?
பெருமை ஓங்குமாறு தமிழைப் போற்றுதல் நலமா?



தொடர் கதை,
☆
சௌமியன்.

# பார்வதி பி. ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

"அடித்தாலும்ஒரு பத்துஆயிரம், இலட்சம் அடிக்கவேண்டும், இப்படி அரையே அரைக்கால் ரூபாயைத்திருடிவிட்டு, ஆறு மாதம் அவதிப்படுகிறோம். நாம்இதிலும் முட்டாளாகத்தான் இருந்திருக்கிறோம். முடிச்சவிழ்க்கும் நேரத்திலே, போலிசாரிடம் சிக்கினால் முதுகுத்தோல் உரிந்து விடுகிறது. சிறையிலேசீவகுப்பு,களிஉருண்டை, கம்பளித்துணி, கட்டாந்தரையிலே படுக்கை, காவலாளியிடம்தொல்லை நமக்கு. சீமான்போலஉலவுகிறார்கள், ஆயிரமாயிரமாக, இலட்சஇலட்சமாகக் கொள்ளையடித்த பேர்வழிகள். அமாவாசையாகப்பார்த்து அர்த்தராத்திரியிலே சிறுதூறல் இருக்கும்போது, புறக்கடையிலே புகுந்து, கன்னம் வைக்கிறோம் மை இருட்டிலே. பாம்பு கடித்தாலும் தேள் கொட்டினாலும், ஆவென்று அழ முடியாது. வீட்டுக்காரன் விழித்துக்கொண்டு பிடித்து விட்டானோ, பாதி உயிர்போய்விடும் அங்கேநடக்கும் பூஜையால். இவ்வளவு ஆபத்தும் இருக்கிறது. தெரிந்து, துணிந்து திருடுகிறோம், சிக்கிக்கொண்டால் சீரழிவுபடுகிறோம். இந்த "ஏ" வகுப்பிலே, பெரிய ஆபீசர்கள் உலவுகிறார்கள், ஒரு சிரமுமின்றி. சூட்சமமாக, செக்புத்தகத்திலே சேஷ்டை செய்தவனும், இமிடேஷனை வைரமாகக் காட்டியவனும், முலாமிட்டதைத் தங்கமென்று கூறி ஏமாற்றியவனும்! அவன் வெளியேயும் மோட்டாரிலே உலவினான், பங்களாவிலே வசித்தான் எலக்ட்ரிக்விசிறியின் கீழ் உட்கார்ந்துகொண்டு, சிகரெட் பிடித்துக்கொண்டே ஊர்க்குடியைக் கெடுத்து வந்தான். இங்கேயும் அவனுக்குப் பால் பழம், படுக்கக்கட்டில், குளிக்கத்தனி அறை கிடைக்கிறது. நாம் சிறையிலே கிடக்கும் நேரத்திலே நமது பெண்டு பிள்ளைகள் பிச்சை எடுக்கின்றனவோ, எங்கேனும் கூலிவேலை செய்து வயிற்றைக் கழுவிக்கொண்டு இருக்கின்றனவோ யார் கண்டார்கள். இந்த "ஏ" வகுப்புப் பேர்வழிகளின் பெண்டுபிள்ளைகள்அதே பங்களாவிலேகுஷாலாகத்தான் இருக்கின்றனர்.—என்று "சி"வகுப்பிலே சிக்கிக்கிடக்கும்கைதிகள் மனதிலே தோன்றாமலிருக்க முடியுமா? எவ்வளவுக்கெவ்வளவு கொள்ளையடித்த தொகை அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நிலைமை உயருகிறது, தண்டனைச் சாலையிலே. இதுஎன்னவிதமான நீதியைச்சார்ந்ததோ தெரியவில்லை. சிறையிலும் சரி வெளியிலும் சரி, செல்வவான் இந்த மரியாதையைப் பெறுகிறான். மூட்டைப்பூச்சியை நசுக்கும் மக்கள், பாம்புக்குப்பயந்து பால் ஊற்றுகிறார்களே அதுபோலத்தான் சிறைநீதியும் இருக்கிறது—என்றுஅந்த "சி"வகுப்புக்கைதிகள் சிந்திக்காமலிருக்க முடியுமா? பார்த்திபனை அவர்கள் காணநேரிட்ட போதெல்லாம், இது போன்ற எண்ணங்கள் தோன்றின, ஒருவருக்கொருவர் இரகசியமாகப் பேசிக்கொண்டனர்.

"எவளோ ஒரு குட்டியைக் கொலை செய்ய இருந்தானாம், மாட்டிக்கொண்டான், தூக்குக்கிடைத்து விடும்" என்று கூறினான் ஒரு கைதி.

"அவள் இவனை விட்டுவிட்டு எவனையாவது இழுத்துக்கொண்டு போயிருப்பாள், மனுஷனுக்கு ரோஷம் இருக்காதா, அதனால்தான் அவளைக்கொலை செய்ய நினைத்திருப்பான்" என்று வேறோர் கைதி கூறினான்.

"ரோஷம் இருந்ததே தவிர அந்தமுட்டாள் ஒரு கையாலாகாதவன் போலிருக்கே. வெட்டு ஒன்று துண்டு இரண்டாகி இருக்கவேண்டாமா? அவளைக்கொல்ல முடியாமல் கூண்டிலேவந்து சிக்கிக் கொண்டான்" என்று ஒரு சிகப்புத் தொப்பி சீற்றத்தோடு கூறினான். அவன், பக்கத்து வீட்டுக்காரனோடு தன் மனைவி பேசினதுகண்டு சந்தேகப்பட்டு அரிவாளால் அவள் தலையை வெட்டிய அசகாய சூரன்.

இப்படித் தன்னைப்பற்றிக்கைதிகள் பலவிதமாகப் பேசிக்கொள்வது பற்றிப் பார்த்திபன் கவலைப்படவில்லை. அந்தக் கைதிகளை அவன் அலட்சியமாகவே பார்த்தான். சமூகத்தின் கூளங்கள் இவர்கள் என்று கருதினான்.

"என் மனைவி, எவ்வளவோ இதமாகத்தான் சொன்னாள், வேண்டாம் வம்புக்குப் போகாதீர்கள். நாம் ஏழைகள், அனியாயமாக நம்மை யாராவது நடத்தினால்கூட நாம் பொறுத்துக்கொள்ள வேண்டியவர்கள். பணம் பாதாளம்வரை பாயும். போலீசிலே நாம் சிக்கிக்கொண்டால் தப்பமுடியாது என்று புத்தி கூறினாள். ஆனால் ரோஷம் எனக்கு. எங்கள் வீட்டுச்சுவரை வேண்டுமென்றே இடித்த பக்கத்து வீட்டுக்காரன் கன்னத்திலே ஒரு அறை கொடுத்தேன். அந்தப் பாவிப்பயலுக்குப் பல் சொத்தை, பல பல வென்று உதிர்ந்தது, குபுகுபுவென்று இரத்தம் ஒழுகிற்று, டாக்டர் சர்ட்டிபிகேட் வாங்கினான், எவனோ ஒரு வாயாடி வக்கீலை வைத்து வழக்காடினான், நானோ வீட்டுப்பயல், வந்துசேரவேண்டி நேரிட்டது இந்த இடத்துக்கு" என்று ஏழ்மையால் இடர்ப்பட்டு, சிறைப்பட்டவன் கூறிட, அதைக்கேட்டு, அவனுக்கு ஆறுதல் கூறவேண்டி மற்றோர் கைதி, "ஆமாம்! ஒரு பெரிய சந்தேகம் எனக்கு. நாம் குற்றம்செய்தோம், அதற்காகத்தண்டிக்கப்படுகிறோம் சிறையிலே இருக்கிறோம். இது நம்மைத் திருத்துமாம்! திருத்தாவிட்டாலும் மற்றவர்களுக்குப் பயமூட்டுவதன் மூலம் எச்சரிக்கையாவது செய்யும். குற்றம் செய்த நமக்குஇந்தத்தொல்லை தருவது ஒருவிதத்திலே முறை என்றே கூறலாம். ஆனால் நமது மனைவி மக்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை, நாம் சிறைப்பட்டதால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள், நம்மை இங்கே கொண்டுவந்ததனால் சர்க்கார் தெரியாமலே நிரபராதிகளைத் தண்டிக்கிறார்கள், இது நியாயமா! நமக்காவது, வீட்டைவிட்டு இங்கே அடைபட்டுக்கிடக்கிறோமே அது ஒன்றுதான் கஷ்டம். அப்படியொன்றும் நாம் வெளியே வாழ்கிறபோது, மாட மாளிகையிலே இல்லை, இங்கே இருப்பதும்குடிசையல்ல! பெரிய கோட்டை!! வேளைக்கு வேளை, வேலை அதிகமின்றி, கவலையின்றிச் சோறு; துணி மணிக்கும் குறைவில்லை. இந்த அளவு உணவும் உடையும் பெற, ஆலைகளிலே வேலை செய்யும் ஆட்கள் படுகிற கஷ்டம் கொஞ்சமல்ல. ஆகவே நம்மைத் தண்டிப்பதாகக் கூறிக்கொண்டுசர்க்கார் நமக்கு ஒருவிதத்திலே நன்மையே செய்கிறார்கள். குற்றம் செய்த நமக்கு இந்த நன்மைபுரியும் சர்க்கார், தங்களையுமறியாமல் குற்றமே செய்யாத நமது குழந்தைகுட்டிகளையும் மனைவி மக்களையும், வாடும்படிசெய்துவிடுகிறார்கள், தண்டனை அவர்களுக்கல்லவா கிடைக்கிறது. நாம் ஜெயிலிலே இருப்பதால், நமது குடும்பம் பட்டினிகிடக்க நேரிடுகிறது. மனைவி மாடென உழைக்கவும், குழந்தைகள் கேட்பாரற்றுக் கெட்டுவிடவும், ஊரார் குடும்பத்தைப்பழிக்கவும் நேரிடுகிறதே. இந்த விசித்திரமான விளைவு, விவேகிகள் வகுத்த சட்டத்தினாலே ஏற்படுகிறதே இதை எண்ணும்போதுதான் எனக்கு ஏக்கம் பிறக்கிறது, இரவிலே தூக்கம் வருவதில்லை என்று கூறுவான். சிறைச்சாலையிலே பேசப்படும் விஷயங்களே தனி ரகம்! பல விஷயங்களைப் பேசுவர், கைதிகள். கைதிகளிலே பக்திமான்கள் உண்டு. பால்மணம் மாறாத குழந்தையை, அரைசவரன் கையணிக்

(11ம் பக்கம் பார்க்க)

# பெரியபுராண ஆராய்ச்சி

5-ம் பாகம்

ஈழத்தடிகள். பி. ஏ.

## சம்பந்தர் வரலாறு.

இனி, ஒருசமயக் கொள்கையையும், அதன் கடவுட்டன்மையையும் விளக்கும் ஒரு நூல், அச்சமயத்தவருள்ளும் சிலரால் மட்டும் அறியப்பட்டும் கையாளப்பட்டும் இருப்பதும்; சிலரால் அறியப்படாமலும் கையாளப்படாமலும், அந்நூல் அவர்களுக்குத் தேவைப்படாமலும் இருப்பதுமான நிலைமை உண்டாவதற்குக் காரணம் ஏற்படும்போது, அச்சமயத்தையும் அதன் தலைவனாகவுள்ள கடவுளையும் எடைபோட்டு முடிவு காணும் பணியை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறேன், ஆராய்ச்சிக்குத் தினைத்துணையும் இடமில்லாத காரணத்தால்.

இனி, இச்சைவசமயம் உண்மையானதும், இச்சமயத்தை விளக்கும் நூல்கள் உண்மையானவையு மாயிருந்தால், அந்நூல்கள் அச்சமயத்தை ஆதரிக்கும் பல்வேறு நாட்டுப் பல்வேறு மொழிகளைப் பேசுபவர் அனைவராலும் மொழிபெயர்க்கப்பட்டுக் கையாளப்பட்டிருத்தல்வேண்டுமன்றோ! அவை அங்ஙனம் மொழிபெயர்க்கப்படாததால், தமிழ் நாட்டுச்சைவம் வேறு, தெலுங்கு நாட்டுச் சைவம் வேறு, மலையாள நாட்டுச் சைவம் வேறு, கன்னடநாட்டுச் சைவம்வேறு, வடநாட்டுச் சைவம்வேறு என்றுதானேகொள்ள வேண்டும். அங்ஙனம் கொள்ளும்போது, தமிழ்நாட்டுச் சைவர்களின் கடவுளான சிவனும், மேலே சொல்லப்பட்ட ஏனைய நாடுகளிலுள்ள சைவர்களின் கடவுளரும் வேறு வேறு பெயர்களோடுதானேஇருத்தல்வேண்டும். ஆனால், மேலே சொல்லப்பட்ட எல்லா நாட்டுச் சைவர்களும் தங்கள் கடவுளைச் 'சிவன்' என்ற பெயரிலேயே அழைக்கக் காண்கிறோம். என்றாலும், அவர்களின் சிவன் இச்சொல்லப்பட்ட தேவார திருவாசகங்களுக்குக் கட்டுப்படாதவரும், இவைகளை ஒப்புக்கொள்ளாதவருமாகவே இருப்பது தெளிவாகத்தெரிகிறது. இந்தநிலையில், யார்சொல்லும் சிவன் கடவுள் நிலையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர் என்பதில் ஐயம் இயல்பாகவே எழுகின்றதன்றோ!

"ஒரு பெயர்-ஒரு வடிவம் ஒன்றுமில்லாத சிவனுக்கு ஆயிரந் திருப்பெயர் பாடித் தெள்ளேணம்கொட்டிய சமயாசிரியர்களால் உண்டாக்கப்பட்ட சமயமன்றோ இச் சைவசமயம்! அங்கு-இங்கு எனாதபடி, எங்கும் நிறைந்திருப்பவரன்றோ இச்சிவன்! ஊர்-பேர்-குணம்-குறி அற்ற ஒன்றன்றோ சிவன் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது! எல்லாமாய்- அல்லதுமாய் உள்ளது எதுவோ, அதுவன்றோ சிவன்! நம்பினோர்க்கு நடராசன், நம்பாதவர்க்கு இயமராசனாக இருப்பவரன்றோ இச் சிவன்! நல்லோர்க்கும் பொல்லாருக்கும் நடுவே நிற்பவரன்றோ இச்சிவன்! அந்தணர் தம் சிந்தையாகவும், யாருக்கும் தெரியாத தத்துவனாகவும் உள்ளவனன்றோ இச்சிவன்! ஓசை ஒலிஎல்லாம் ஆனபின் பேசஇரண்டாக இல்லாத பொருளன்றோ இச்சிவன்! எச்சமயத்தவரும் வணங்கும் இயல்பைப் பெற்றவரன்றோ இச்சிவன்!" என்பன போன்ற பல எடுத்துக்காட்டுகளால் தமிழ்நாட்டுச் சிவனுடைய இலக்கணம், தேவார திருவாசகங்கள் வாயிலாக விளக்கப்பட்டுளது. ஆனால், இவ்விளக்கங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலும், முன்னுக்குப்பின் முரணாகவுமே விளக்கப்பட்டுள்ளன.

ஒரு பெயர்-ஒருவடிவம் ஒன்றுமில்லாத சிவனுச்கு ஆயிரம் திருப்பெயர் பாடுவதாம்.

முதலில், பெயரும் வடிவமும் இல்லையென்பதாகச் சொல்லப்பட்ட ஒன்று எதுவோ, அது 'சிவன்' என்ற பெயர் சூட்டி அழைக்கப்படுகின்றது. ஏதாவது ஒரு பொருள், அது, எதுவாயினுஞ்சரி, அதற்கு யாதாயினும் ஒரு பெயர் இருப்பது இயல்பு. ஆனால் ஈண்டுப்பேசப்படும் பொருளுக்கு பெயரே கிடையாது;

கிடையாதா?

இருக்கிறது!

என்ன பெயர்?

'சிவன்.'

பெயர் இல்லாத ஒன்றுக்குச் சிவன் எனற பெயர் எப்படி வந்தது?

அப்பொருளின் தன்மைகளை ஆராய்ந்ததில், அதற்குச் சிவன் என்ற பெயரே தகுதியுடையதாயிற்று.

அப்படியா, சரி! ஒருபொருளின் தன்மைகளைக் கண்டறிவதற்கோ அல்லது ஆராய்ந்தறிவதற்கோ, அப்பொருளுக்கு ஒருவடிவம் இருத்தல் வேண்டுமல்லவா?

ஆம், வேண்டும்.

அப்பொருளுக்கு வடிவமே இல்லை என்றல்லவா அப்பொருளை விளக்கும் நூல்கள் கூறுகின்றன. வடிவம் மட்டுமல்ல; ஊர்-பேர்-குணம்-குறி எதுவுமே இல்லையென்றல்லவோ பின்னும் அந்நூல்கள் வலியுறுத்திக் கூறுகின்றன!

எதுவும் இல்லாத ஒன்று, அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருக்கிறதாம்.

எதுவும் இல்லாத அல்லது எதுவும் தேவைப்படாத ஒன்று, எப்படி எங்கும் நிறைந்திருக்கமுடியும்? எதுவும் இல்லாததற்கு 'ஒன்று' அல்லது 'சிவன்' என்ற பெயர் எப்படி வந்தது?

இல்லாதது, இல்லாததேதான். அதற்குப் பெயரும் வடிவமும் கற்பிப்பது பேதைமையே!

அதனினும் பேதைமை, அதற்குக் குணம்-குறி கற்பிப்பது. அதனினும் பேதைமை, அதனை உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் என்பது. அதனினும் பேதைமை, அதனை நிலவுலாவிய நீர்மலி வேணியன் என்பது. அதனினும் பேதைமை, அதனை அலகில் சோதியன் அம்பலத்தாடுவான் என்பது. அதனினும் மிகமிகப் பேதைமை, அதனை அதன் மலர்சிலம்படியை வாழ்த்தி வணங்குவாம் என்பது.

உலகமெலாம் ஒன்றுசேர்ந்தாலும் உணர்ந்து உரைக்கமுடியாத ஒன்றை நிலவுலாவிய நீர்மலிவேணியன் என்று அழைத்து அதற்கு வடிவம் முதலானவை கற்பித்ததன் கற்பனைத்திறத்தை என்னென்பது!

மேலேசொல்லப்பட்ட பொருள்களை உள்ளடக்கியபாடல்தான், 'உலகெலாம்' என்று தொடங்கி 'மலர்சிலம்படிவாழ்த்தி வணங்குவாம்' என்றுமுடிந்து, பெரியபுராணம்பாடவந்த சேக்கிழாருக்குச் சிவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றுப் பாடப்பட்டதாகும்.

எப்படிப்பட்டசிவனால்?

ஊர்-பேர்-குணம்-குறி எதுவும் இல்லாதவன் என்று பெரியபுராணத்தில் பேசப்படுகின்ற அந்தச் சிவனால்தான், ஊர்-பேர்-குணம்-குறிகற்பிக்கும் இந்தப் பாடல் அடியெடுத்துக்கொடுக்கப்பட்டதாம்.

எப்படி அடியெடுத்துக்கொடுக்கப்பட்டது?

'மெய்ம்மொழிவானிழல்கூறிய பொருளினும்' என்று சேக்கிழாரே கூறியுள்ளார்.

'வானிழல்' என்பதை அசரீரி என்று வடமொழியாளர்கூறுவர். ஆகாசப்பதிவு (Akashic Rocords) என்று கூறுவாருமுளர்.

இக்காலத்தில் காணப்படும் வானிழல் அல்லது ஆகாசப்பதிவு முறை எப்படிப்பட்டதென்பது குறித்துப் பெரும்பான்மை மக்கள் நன்கறிந்திருப்பதால், அது பற்றிய ஆராய்ச்சி ஈண்டைக்கு வேண்டப்படுவதில்லையென விடுத்துச், சேக்கிழார் கூறும் வானிழலைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பெரியபுராண ஆராய்ச்சி

*3-ம் பக்கத் தொடர்ச்சி*

பெரியபுராணத்திற் காணப்படும் தொண்டர்களைப்பற்றிய வரலாறுகளைப்பாட விரும்பிய சேக்கிழார், சிவனை நோக்கி, 'உம்முடையதிருவருள் இல்லாமல், திருத்தொண்டர்களின் திறங்களையுணர்ந்து பாடுவதற்குயான் தகுதியற்றவன்; ஆகையால் உம்முடைய திருவருட்டுணைவேண்டும்' எனமுறையிட்டாராம். இந்தமுறையீடு, 'பொய்யன்புக்கெட்டாத பொற்பொதுவில் நடம்புரியும் ஐயன்தன் திருச்செவிக்கு' எட்டியதாம். உடனே, 'உலகெலாம்' என்ற சொற்றொடரை, ஐயன் அன்புடன் ஆகாயவழியாகச் சேக்கிழாரின் செவியில் நுழையும்படி அனுப்பி வைத்தாராம். இந்த 'உலகெலாம்' என்ற சொற்றொடரை முதலடியாகக்கொண்டு சேக்கிழார் பெரியபுராணம் முழுவதையும் பாடிவிட்டாராம்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பதாகச்சொல்லப்படும் சிவன், சேக்கிழாரின் முறையீட்டை நிறைவேற்றி வைக்கும் தமது கருத்தை வானிழல் வாயிலாகஅனுப்பிவைத்தார் என்றால், அவருடைய எங்கும் நிறைந்த இயல்பு என்னவாயிற்று? எங்கும் நிறைந்துள்ள ஒருபொருள், எங்கோதொலைவில்இருந்து கொண்டு தனதுகருத்தை வானிழல்வாயிலாகஅனுப்பிற்றென்பது முன்னுக்குப் பின்முரணாகவன்றோ இருக்கிறது! எங்கும்நிறைந்துள்ளதாகச் சொல்லப்படும் சிவன், சேக்கிழாரிலுமன்றோ நிறைந்திருத்தல்வேண்டும்! சிவன்எப்படிப்பட்டவர்? எங்கிருப்பவர்? என்பனவற்றை அறியாத நிலையிலன்றோ சேக்கிழார் வானத்தை அண்ணாந்துபார்த்தபடிதமது முறையீட்டை வெளியிட்டிருக்கிறார்! சிவ இயல்பை அறியமுடியாதநிலையிலிருந்த சேக்கிழாருக்குச் சிவஅருள் கிடைத்ததென்பதும், அவ்வருட்டுணைகொண்டே பெரியபுராணம் பாடப்பட்டதென்பதும் சிவஇலக்கணப்படி ஒப்புக்கொள்ளமுடியாததாகும்.

எப்படியென்றால், "மெய்யுணர்வு பெறாதஉயிர்கள், ஆண்டவனை உணர்வது அரிது' என்பது சைவஇலக்கணம்கூறும் உண்மை. அன்றியும், 'தம்மையுணராதவர், தம்தலைவனாகிய சிவனையும்உணராதவரே' என்பதும் சைவசித்தாந்தத்தின் முடிபாகும். எனவே, சேக்கிழார் மெய்யுணர்வு கைவரப்பெறாதவர்என்பதும், தம்மையும் தலைவனையும் உணரப்பெறாதவர்என்பதும் இதனால் நன்குதெளிவாகின்றது. பெரியபுராணம்பாடவந்த சேக்கிழார்; தம்மால்அதைப்பாடமுடியாதென்பதைஉணர்ந்து, அதற்காகச் சிவனாரின் துணையை நாடுகிறார். சிவ இயல்பு இப்படிப்பட்டது; சிவன் இத்தன்மையர்; அவர் இருக்குமிடம்இது என்பனவற்றையேஅறிந்துகொள்ளமுடியாத நிலையில்இருந்துகொண்டு, சிவனையும் சைவத்தையும் முழுதுணர்ந்தவர்களாகச்சொல்லப்படும் சம்பந்தர்முதலான நாயன்மார்களின் வரலாறுகளைப் பாடியதாகச்சொல்லப்படுவது ஒருசிறிதும் ஒப்புக்கொள்ளக் கூடியதன்று.

அன்றியும், எங்கும்நிறைந்துள்ளதாகச் சொல்லப்படும் சிவன், சேக்கிழாரிலும் நிறைந்துநின்று, அவருடையவிருப்பத்தை நிறைவேற்றிவைக்காமல், எங்கோதொலைவில்இருந்துகொண்டு வானிழல் (அசரீரி) வாயிலாகப் பெரியபுராணம் பாடுவதற்கு அடியெடுத்துக்கொடுத்தார்என்பது 'எங்கும் நிறைந்துள்ளவர் சிவன்' என்பதற்கு இழுக்கன்றோ! (தொடரும்.)

---

## திராவிடர் கழகங்கள்

### வாழ்தூடை

9-12-44ல் இவ்வூர் திராவிடர் கழகத்தின் சார்பாகப் பெரியார் பிறந்த நாள் விழா தோழர் J. முனிசாமி தலைமையில் சிறப்புடன் நடந்தது. பலதோழர்கள் பெரியாரின் அருஞ்சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

### கோவை

8-12-44ல் ஷையூர் திராவிடக்கழகக் கூட்டம் தோழர் J. S. கண்ணப்பர் தலைமையில் கூடிப்பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

30-11-44 ஷையூர் மாணவர் தமிழ்ச் சங்கத்தின் கூட்டம் தோழர் J. S. கண்ணப்பர் தலைமையில் கூடி தோழர் இரா. நெடுஞ்செழியன் அன்றும் இன்றும் என்பது பற்றிப்பேசினார்.

### தேனி

30-11-44ல் ஷையூர் தோழர் M. R. ராதா அவர்களது திராவிட புதுமலர்ச்சி நாடக சபையாரால் 'இழந்தகாதல், என்னும் நாடகம் நடத்தியபோது அவ்வூர் திராவிடர் தோழர்கள் தோழர் M. R. ராதாவைப் பாராட்டி ஒரு வெள்ளிக் கோப்பையைப் பரிசளித்தார்கள்.

---

## திருமணம்

### தூத்துக்குடி

4-12-44ல் இவ்வூர்த் தோழர் பெருமாள் நாடார் புதல்வன் பொன்னையாவுக்கும், தோழர் C. பெரியசாமி நாடார் புதல்வி அன்னப்பழத்துக்கும். தோழர் P. S. சண்முகம் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடந்ததன் பொருட்டுத் திராவிட நாடு இதழுக்கு ரூ. 1—0—0 நன்கொடை தரப்பட்டது.

### கரியாப்பட்டணம்

6-12-44ல் காரைக்கால் தோழர் முனியாண்டிக்கும், தோழியர் குஞ்சம்மாளுக்கும், தோழர் S. V. சுப்பையன் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் நடந்தமைப்பற்றித் திராவிட நாடு மடலுக்கு ரூ. 1—0—0 நன்கொடை யளிக்கப்பட்டது.

## ஒழுங்கு நடவடிக்கையாம்!

எங்கே போனாலும், டாக்டர் வரதராஜுலுவுக்கு ஒரேவிதமான நிலைமைதான்! அவர் "ராசி" அப்படி என்று சொல்லலாம், வைதீக பாஷையின்படி பேசுவதானால். என்னமோ பாபம், கடைசிகாலத்திலே அவருக்குக் காதல் பிறந்தது இந்து மகசாபைமீது. அங்கு சேர்ந்தார், பவனிவந்தார், சிவாஜியின் வீரமும் பிரிடிஷ் தந்திரமும் இரண்டும் தன்னிடம் ஒன்று சேர்ந்து விட்டதோ என்று அவருக்கே நினைப்பு உண்டாகும்படி நடந்துகொண்டார். இவ்வளவுசெய்தும் என்ன பலன் கண்டார்? அதைக் கேட்டால்தான், வெட்கமாக இருக்குதம்மம்மா, என்று பாடக்கூடத்தோன்றுகிறது. ஜெயப்பூர் சமஸ்தானத்திலே சர். மிர்சா இஸ்மாயில், இந்துக்களின்நலனுக்குக் கேடு சூழும்படி நடந்துகொள்ளுகிறார் என்று இந்து மகாசபைத்தலைவர் அறிக்கை வெளியிட்டார். டாக்டர் நாயுடு ஜெயப்பூர் சென்று, நேரிலே நிலைமையைக்கண்டு வந்தபிறகு ஒரு அறிக்கை வெளியிட்டார், ஜெயப்பூரிலே இந்துக்களுக்குக் கேடுநேரிடக்கூடியகாரியம் எதனையும் சர். மிர்சா செய்யவில்லை என்று. டாக்டர் நாயுடுவின் நேர்மை, இந்துமா சபைக்குப் பிடிக்கவில்லை. டாக்டர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்து மகாசபைப் பிரமுகர் ஒருவர் கூறியிருக்கிறார். என், டாக்டர் நாயுடு இந்த வீணர்களுடன் சேர்ந்து தமதுவீரத்தையும்திறமையையும்விழலுக்குஇறைத்துப்பாழாகிறார்என்ற விசாரம், அவரை அறிந்த அனைவருக்கும் இருக்கிறது. அவருக்குமட்டும், விசாரமும் காணோம் குருகுலப்போராட்டகால ரோஷமும் தென்படவில்லை. இப்படியா தேய்ந்துபோக வேண்டும் தென்னாட்டுத் திலகர்? பரிதாபம்! பரிதாபம்!!

---

## கலகம் இல்லை!

சிந்து மாகாண அரசியலிலே சிறு குழப்பம் விளைந்தது, ஆனால் சீராக்கப்பட்டுவிட்டது. அங்கு இப்போது லீக் மந்திரிசபை நடைபெறுகிறது, எனவே அங்கு கடுகு தோன்றினாலும் அது மலையளவு தெரியும்படி "துவேஷதிருஷ்டிக் கண்ணாடி"யைத் தேசியவாதிகள் தயாரித்துவிடுகின்றனர். அந்தச்சூதுதெரிந்து, சிந்து மாகாண முதலமைச்சர், முளையிலேயே விஷமத்தைக்கிள்ளி எறிந்து விட்டார்.

சிந்து மாகாணத்திலே விவசாயவளர்ச்சிக்காக, மந்திரிசபையிலே, மிஸ்டர் ரோஜர்தாமஸ் என்ற வெள்ளையர் நியமிக்கப்பட்டார், அவருக்கு, விவசாயத் துறைக்

(10ம் பக்கம் பார்க்க)

## பேரறிஞர்

### செ. தெ. நாயகம் மறைவு

### தன்மதிப்பியக்கத்தின் பெருநஷ்டம்

தன் மதிப்பியக்கத்தில் முதலிடம் பெற்றுத்திகழ்ந்த, திராவிடத்திருவிளக்கு தோழர் செ. தெ. நாயகம்அவர்கள், ஒரு மாதமாக உடல் நலமில்லாதிருந்து, குலசேகரபட்டினத்தில் 13—12—44ல் இயற்கை எய்தினார்கள் என்பதைவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.


# திராவிட நாடு.

காஞ்சி 17—12—44 ஞாயிறு


## வைத்திய வேவல்!

★

இந்தியாவுக்கு என்னதேவை என்பதைப்பற்றி வைஸ்ராய் வேவல் ஐரோப்பிய வர்த்தக சபையில் பேசியிருக்கிறார். வர்த்தகர்களாக நுழைந்த வெள்ளையர்கள் நாட்டையாளத் தொடங்கியது எவ்வளவு விசித்திரமோ, அவ்வளவு விசித்திரந்தான் இந்தியாவின் தேவைபற்றி ஐரோப்பிய வர்த்தக சங்கத்தில் பேசியது. அரசியல் இந்தியாவை நோயாளியாகவும் தம்மை ஓர் ஆலோசனை கூறும் டாக்டராகவும் வைத்துக்கொண்டு வைஸ்ராய் வேவல் பேசியிருக்கிறார். அவருடைய சொற்பொழிவிலே யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பலபகுதிகள் உள்ளன என்றபோதிலும், அவர்யோசனை கூறும் டாக்டராக மட்டும் இருந்துகொண்டு மருந்தூட்ட முன்வராமலிருப்பதைப்பலரும் ஆட்சேபித்தே தீருவார்கள். இந்தியாவில் பல சிக்கல்களிருப்பது உண்மை. ஐரோப்பா பூராவையும் ஒரே குடையின் கீழ் ஆளுவதற்கு அமைப்பு ஏற்பட்டால் எவ்வளவு சிக்கல்களிருக்குமோ அதைவிட இந்தியாவில் அதாவது பல நாடுகள், பல்மதங்கள், பல இனங்கள் ஆகிய ஒரு கதம்பத்தில் இன்றுள்ள சிக்கல்கள் குறைவு என்று சொல்லலாம். இந்த சிக்கல்களிலே சில, பிரிட்டிஷ் ஆட்சியின் பயனாகவே ஏற்பட்டவை. ஆட்சி முறைக்கு வசதி தேடிக்கொள்ளவோ அல்லது ராணுவக்காரணத்தை முன்னிட்டோ பிரிட்டிஷார் இந்த உபகண்டம் ஒரே நாடு என்ற கற்பனையை ஏற்படுத்திவிட்டார்கள். இதனுடைய பலனாக ஒன்றுக்கொன்று நேர்மாறானதும் முரண்பாடுகள் மிகுந்ததுமான பல இனமக்களை ஒரு மத்தியப் பொது ஆட்சியின் கீழ்க்கொண்டுவர ஏற்பாடாயிற்று. பசுவும் புலியும் ஒரே துறையிலே நீரருந்தியதாகக் கதை கூறும் புராணமுங்கூடப் புலி பசு மீது பாயலாமென்று எண்ணிய நேரத்தில் ஆண்டவனின் சக்ராயுதம்வந்து புலியைக்கொன்றதாகத்தான்தெரிவிக்கிறதேயொழிய, பசுவும் புலியும்என்றென்றும்ஒன்றாக வாழ்ந்ததாகக் கூறவில்லை. பச்சைப்புளுகான புராணங்களை எழுதியவர்கள்கூடச் சொல்லுவதற்குக் கூசிய விஷயத்தைப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கொஞ்சமும் கூச்சமின்றி, கூறுகிறார்கள் கூறுவது மாத்திரமல்ல, அது தங்களுடைய கூர்ந்த மதிக்கு அறிகுறி என்றும் நம்புகிறார்கள். அண்டைவீடான அயர்லாந்தை ஒரே ஆட்சியின் கீழ்கொண்டுவரமுடியாததை வேவல்அறிந்திருக்கிறார். அயர்லாந்து என்ற வீட்டிற்குப் புறக்கடைபோலிருக்கும் அல்ஸ்டர் என்ற பகுதியைஅயர்லாந்தோடு ஒட்டி வாழவைக்க முடியாமல் வெட்டித் தனியாக்கவேண்டிய நிலைமை உண்டானதை வைசிராய் மறந்திருக்க முடியாது. அப்படியிருந்தும்கூட வேவல் வர்க்கத்தினர் இந்தியா என்ற இந்த உபகண்டத்தை ஒரே நாடு, ஒரே ஆட்சியின் கீழ்இருந்து தீரவேண்டுமென்றுகூறுவது ஈளைகட்டி இருமிக் கொண்டிருப்பவனுக்கு வேளைக்கு வேளை தவறாமல் எலுமிச்சம் பழச்சாறைத்தருவதுபோலவும், மயக்கநோய் கொண்டவனுக்கு மதுவை மருந்தாக அளிப்பதுபோலவும், படுக்கையறையிலே எலி நுழையாதிருக்கப் பாம்பைக் காவல் வைப்பதுபோலவும், லண்டன் A. R. P. ஸ்தாபனத்திற்கு ஜெர்மன் கொயபெல்ஸை விசேஷ அதிகாரியாக நியமிக்க விரும்புவது போலவுமிருக்கிறதேயொழிய, விவேகத்தின் அறிகுறியாகவோ நல்லெண்ணத்தின் விளைவாகவோ நமக்குத்தோன்றவில்லை. வெள்ளையனே வெளியேபோ என்ற மருந்தும் சத்யாக்ரக மாத்திரைகளும் அரசியல் இந்தியாவின் நோயைப்போக்க முடியாதென்றுவெள்ளைவர்த்தகச்சபையிலேஆங்கில வைஸ்ராய்மருத்துவமொழியிலே பேசியிருக்கிறார். அந்த மருந்தும் மாத்திரையும் நாட்டு நலிவு தீர்க்க ஏற்றதல்லவென்று நாமும் கூறியிருக்கிறோம், இன்றும் கூறுகிறோம். ஆனால் பாகிஸ்தான் திட்டம் போன்ற ஆபரேஷன் முறையும் கூடாது என்று வைஸ்ராய் கூறுவதை நாம்ஏற்றுக்கொள்ளமறுக்கிறோம். பாகிஸ்தானம், இந்துஸ்தானம், திராவிட நாடு என்று இந்திய உபகண்டத்தை மூன்று அமைப்புகளாகப் பிரிப்பதுதவிர இந்த உபகண்டத்தைப்பீடித்திருக்கும் பிணியைப்போக்க வேறு தக்க முறை இல்லையென்பதை வைஸ்ராய் வேவல் தம்முடைய போர்க்கள அனுபவங்களை மனதிலே நிறுத்தி, பிரிட்டிஷ் ராஜதந்திரத்தை விலகியிருக்கச்செய்து யோசித்துப் பார்ப்பாரானால் உணர முடியும். ஆனால் புள்ளிமானைத்துள்ளி விளையாடாதே என்றும், சிறுத்தையைச் சீறாதே என்றும் சொல்லிப் பயனில்லை என்பதை நாம் அறிவோம்.

இந்த ஆபரேஷன் இப்போது அவசியமில்லை, வேறு பலமருந்துகளிருக்கின்றன அவைகளை உட்கொள்ளலாம் என்று வைத்திய வேவல் யோசனை கூறுகிறார். மூன்று வட்டமேஜை மகாநாடுகள் கூடிக் கலந்து தயாரித்த மருந்து நோயை அதிகப்படுத்திற்றே தவிர, பலன் தரவில்லை. சமரசபோதனைகள் சச்சரவுகளை அதிகப்படுத்திற்றே தவிரச்சாந்தியை யுண்டாக்கவில்லை. தனித்தொகுதிதாகவிடாயை அதிகரிக்கச்செய்தது. தர்மோபதேசம், தருக்கர்களுக்குத் தாட்சண்யவாதிகளைப் பலியாக்கிற்று. துன்பத்திலே இன்பத்தைக்காண வேண்டுமென்றும், வேற்றுமையிலே ஒற்றுமையைப்பெற வேண்டுமென்றும், வேதாந்திகள் போதித்தது எப்படி வீணாயிற்றோ, அதைப்போலவே அரசியல்நோயைத்தீர்க்க இதுவரை அளிக்கப்பட்ட மருந்துகள் நோயாளிக்கு வேதனையையதிகப்படுத்திற்றே தவிர, ஆரோக்கியத்தை அளிக்கவில்லை. மற்ற மருந்துகள், உள்ளுக்குப் பிடிக்காததை உணர்ந்துதான் இந்த அறுவை முறை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதே ஒழிய வேறல்லவென்பதை வைஸ்ராய் உணர வேண்டுகிறோம். அந்தக்காலத்து நாட்டினம், இந்தக்காலத்துக்குப்பயன்படாதென்று பொருளாதாரத்துறைபற்றிப் பேசுகையில் வைஸ்ராய் வேவல் கூறியிருப்பதைப்போலவே நாமும்கூறுகிறோம், அந்தக்காலத்து அரசியல் அமைப்பு முறைகள், இந்தக்காலத்திற்கு ஏற்காது என்று. எல்லைக்கோடுகளுக்காகவும் இனஉரிமைக்காகவும் எண்ணற்ற வீரர்கள்மாண்ட களக்காட்சியைக் கண்ணால்கண்ட வைஸ்ராய் வேவலுக்கு நாம் நினைவூட்டுகிறோம், ஜெர்மனி ஆதிக்கத்திலே வாழ்ருக்கும் ஆஸ்டிரியாவையும், ஸ்பெயின் ஆட்சியிலிருந்து விலகியிருக்கும் உரிமையைப் பெற்றுள்ள போர்ச்சுகலையும்வைஸ்ராய் வேவல்மனதிலிருத்திப்பார்ப்பாரானால் பத்துக்கோடி மக்களுக்கு ஒரு பாகிஸ்தானம்கேட்பது பாதகம்ஆகாதென்பதைத்தெரிந்துகொள்ளமுடியும். மருந்துகூடத்தேவையில்லை. காற்றோட்டமுள்ள இடத்திலே உலவி, உழைத்தால் இந்தியா ஆரோக்கியத்தைப் பெறமுடியும் என்று வைஸ்ராய் பேசியிருக்கிறார். ஆரோக்கியத்தைப்பெற நல்ல காற்றும் உழைப்பும் தேவை யென்பது மருத்துவ அரிச்சுவடி, அதை நாம்மறக்கவில்லை, ஆனால், நல்ல காற்றோட்டமுள்ள இடம்எப்படிக்கிடைக்கும்? மடைமமலைகளும், குரோதக் குன்றுகளும், துவேஷஅகழிகளும், புராட்டு என்னும் பழைய மாளிகைகளும்; பழங்கால் கருத்தென்னும் குப்பைக்கூளங்களும், வேதாந்த வேலிகளும், சித்தாந்தச் சதுப்புநிலங்களும், ஆரிய ஆதிக்கமும், ஆங்கிலப்பிடியும் நிறைந்துள்ள இடத்திலே நல்ல காற்று

(8ம் பக்கம் பார்க்க)

# கல்லூரியில் கம்பன் மலர்

(அன்பழகன்)

சென்னை, கம்பர் கழகம், பல புலவர் பெருமக்கள்வாய்திறந்தருளிய கருத்துரைகளைக்கட்டுரைகளாகக் கொண்டு, மேலட்டையில், மேலாடை கீழாடையாகிய நிலையில், கட்டிய கச்சு கண்ணிற்கு விருந்தாகும் வகையில், அடிவயிற்றின் அரைப்பகுதி மறைய மறுக்க, கையலரில் செந்தாமரை மலரினை ஏந்தி மைவிழியின் நாட்டத்தினை, அல்லையாண்டு அமைந்தமேனி அழகனின் அடியினில் நிறுத்திய, கட்டழகின் வடிவத்தைத் தாங்கி, கம்பன் மலராக வெளிவந்துள்ளது. கம்பனின் உள்ளத்தை யுணர்ந்த கழகத்தார், மலரின் புறவிதழிலேயே அதன் நாற்றத்தை நாட்டோர் நுகரச் செய்துள்ளனர், மலர் முகத்தணங்கின் உருவத்தினையே உருவகமாகக்கொண்டு.

'கம்பன் மலர்' என்னும் தலைப்பில் நிலைமொழி ஈறுகெட்டு நின்றது. மலர்ந்ததை யொப்ப, காலத்திற்கேற்ற கருத்தழகென்னும் மணத்தினை நல்காது, காகித மலரெனக் காட்சி யளிப்பது மிகவும் வருந்தத்தக்கதாம். உண்மையையுரைக்குமிடத்து, உலகிற்குப் பயனளிப்பதல்ல என்பது மட்டும் மல்ல, தமிழர்க்கோ அன்றித் தமிழ் மொழிக்கோ இது ஆக்கமளிப்பதல்ல என்பதோடு இழிவினையும் தருகின்றது என்று துணிவுடன் கூறலாம்.

இத்தகைய மலரை, அலர்ந்த முகத்துடனும், மலர்ந்த உள்ளத்துடனும், இளமை மணம் கமழ, அறிவொளியினைப் பெறும் விழைவினராய்க் கல்லூரியில் கல்வி பெற முற்படும் இடைநிலைவகுப்பு (Intermediate) மாணவர்களுக்குத் தமிழ்ப்பாட புத்தகமாக அமைக்கப்பெரு முயற்சி நடக்கின்றதாம்.

அம் முயற்சி வெற்றி பெறுமானால் சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ்ப்பாடக் குழுவினர், கம்பனிடத்துக்கொண்ட காதலை அல்லயன்ஸ் கம்பெனியாரிடத்துக் காட்டுங்கருணையால், வெளிப்படுத்திக்கொள்ள ஆசைப்படுவார்களானால் அதன் விளைவு-கல்லூரி மாணவர் தம் நிலையை இரக்கங்கொள்ளச்செய்வதன்றி, கல்லூரித்தமிழாசிரியர்கள்நிலையும் எள்ளி நகையாடத்தக்கதாய் அமையும் என்பது நினைக்கற்பாற்றும்.

கம்பன் ஓர் கவிமட்டுமல்ல! மகாகவி, புலவர் புலவன், உலகக் கவியும் கூட என்று வேண்டுமானாலும் கூறலாம், கவிதையில் 'கொள்ளுங் காதல், காதல் இழந்துவிடுவதாகச் சொல்லப்படுங் கண்ணினைத்தான் காப்பாற்றிக்கொள்ளும் வகையறியாததால். கம்ப ராமாயணம், ஒரு தமிழ்க்காப்பியம்மட்டுமல்ல இலக்கியப்பூங்காஎன்று இயம்பினாலும் போதாது, ஒன்பான் சுவையும் உள்ளடக்கியகலைக்கூடம் என்பதும் சாலாது, பாத்திரப் பிரமாவாகிய கம்பன் தோற்றுவித்த உயிரோவியங்கள் உலகப் படப்பிடிப்பு என்று வேண்டுமானாலும் போற்றட்டும், கலைநயம் கற்றறிந்த கவிவாணர்கள். அவர்களுடைய கம்பக்காதல், வம்புக்காகவன்றி, வீம்புக்காக வளர்க்கப்படாமல், கதிரேசனார், காட்டியுள்ளதுபோல "காப்பியங் கூறுதல், ஓர் காதலி தன் இனிய காதற்கிழவனுக்குக் கூறுவதுபோல" என்ற வகையிலே அமையட்டும்; ஒத்த நிலையினராய் அமையும் இயல்பே, தலைவன், தலைவியின்காதல் பேச்சினைக் கரும்பஞ்சாறோ, கற்கண்டோ, தேம்பாகோ என மிகைப்படுத்துவதாகும். அவ்வாறன்றிக்காப்பியக்காதலியின் சொல்லினை அறிந்த ஒருவர், காதலனுக்குஅவற்றை உரைப்பதுபோன்ற நிலையில் ஒத்த நிலை பெறுதாரைக்கூட்டுவிக்கும் இச்செயல் பயனற்றதாம் என்பதில் ஐயமின்று, காப்பியக் காதலியின், முகவழகினை, தொடைநயத்தினை, அணிச்சிறப்பினை, சொல்லினிமையினை பொருள் நலத்தின் ஆழத்தினைக்காணட்டும்; அதனைப் பேசி மகிழட்டும், கட்டுரை எழுதிக் களிகொள்ளட்டும், அதனைக்கண்டு நாம் வருந்தவில்லை; வருந்தத்தேவையுமில்லை, ஆனால், அது கல்லூரி மாணவர்கள் கையிலே காட்சியளிக்க வேண்டுமா? அவர்கள் படித்தறிய வேண்டியதா? படித்துப் பலன் பெறமுடியுமா? என்பதைச்சிந்தித்துப்பாருங்கள் பின் கூறுங்கள் பதில்.

'கம்பன் மலர்' கல்லூரியில் வைக்கப்பட்டால், அம்மலரினை இழக்க எந்தமாணவரும் துணியமாட்டார், ஏட்டின்கண் நிறைந்துள்ள கட்டுரைகளுக்காக அல்லாவிட்டாலும், அட்டையின் கண்காட்சியளிக்கும் கட்டழகிக்காகவாவது வாங்கித்தான் தீருவார்கள், வாங்குவது மட்டுமல்ல, அதனைஏந்தாதகரங்களோ, அக்கண்கவர் காட்சியைக்கண்டுகொண்டிராத கண்களோ காண்டலும்அரிதாம், "அழகிற்கு அழகு யாரே செய்வார்" என்பதைப்போன்றுஅட்டைக்குஅட்டையாரே தேடுவார்? கிடைத்தாலும் யார்தான் போடுவார்? என்ற நிலை அவர்களுடைய உரிமையாகக்காட்சியளிக்கும். கல்லூரியில், கலை பயிலச் சென்று வேறு வேலையிலே ஈடுபடும் மனத்தினர், இதனையே அதற்குரிய வலையின் முதல் காட்சியாக்க முனைவர், "யாரோ ஒருவன் அன்னாளிடம் அதனைக் காட்டினனும்," "அவன் அவ்வேடில்லாமல்கல்லூரிக்குவந்ததேயில்லையாம்" என்பதுபோன்றபேச்சுக்கள், இருபாலாரிடத்தும் இயல்பாகவிட்டாலும்சிலகாலமாவது வழங்கித்தான் தீரும். ஆனாலும் அதற்காக நாம் இம்மலரினைக்கண்டு காயவில்லை, அது முறையுமல்ல.

கம்பன் மலரில் ஒரு கட்டுரை, "ரம்பையா மேனகையா?" என்ற தலைப்பில். எழுதியவர், கலாரசிகர், கலிகாலக்கம்பர் அந்தப்பாணியையுணருஞ்செவியார்சிதம்பரநாதமுதலியார் அவர்கள், 'ஒருகாடுமனுஷசஞ்சாரம்இல்லைத்தானே! அல்ல, இருக்கத்தான்செய்கிறது." என்று தொடங்குகிறார், திடீரெனக்காட்டிலே குதித்துத் திகைத்துநின்று கண்டகாட்சியை, கடாவிடைகளான்கிறுவும் கவிதாசக்கிரவர்த்தியின் உரைமாற்றுருவம். "ஒருவீடு. முரட்டுத்தன்மையை வார்த்துவிட்டதுமாதிரி ஓர் பெண் நிற்கிறாள். அவள் "பங்கயச் செல்வியை மனத்துப்பாவியா, அங்கையின் ஆயமந்திரத்தை ஆய்ந்தனள்"என்று சொல்லிமேலும் அவள் "அப்படியே ஒரு அறைக்குள்(ப்) போய்விட்டு வெகு சீக்கிரத்தில்(த்)தானே திரும்பிவந்துவாசலில்நிற்கிறாள்" என்றுசொல்கிறார். இதன்கண், இலக்கணத்திற்கு மாறுபட்ட முறையில், ஒலியின் இயல்பினையும் மாற்றும்அளவில், ஒற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன ஆசிரியரால்! பின்னும் அவளைக் குறித்து "இப்படியும் ஆள்ஜோடிப்பு உண்டா" என்று அதிசயித்துநின்று, கழுத்தில்உள்ள "(ர)த்தின ஆரங்களைக்"கண்டு "ஜரிகை முன்றானைஎன்ன" என்று கேட்டு "எல்லாம்சேர்ந்த ஒரேடால்" என்று முடிக்கின்றார் கலைச்செல்வர்!

ஒருபாடலைக் கையாளுகின்றார், அதன் கண்ணே தம்துகைவரிசையையும்காட்டியுள்ளார். அது:

"திங்களில்(ச்) சிறந்தொளிர்
முகத்தின் செவ்வியள்
பொங்கொளி விசும்பினில்(ப்) *
பொலியத்தோன்றினள்"

என்பதாம். எவ்வளவு ஆழ்ந்துணர்ந்து விட்டுப்போன இடங்களுக்கு ஆசுவைத்துச் சீர்செய்திருக்கிறார் இப்புலவர் என்பதைநோக்குங்கள்.

காட்டிலே அவளைவிட்டுவிட்டதாக மீதுயாரும் காயத்தேவையில்லை. அவரே சொல்கிறார்கேளுங்கள் "இந்த அம்மணி வீட்டைவிட்டுப்பறப்படுகிறாள். கொடி, செடி பக்கலில்நிற்கின்ற நம்பக்கமாகவே நடந்துவருகிறாள். சமீபத்திலேயே அவளைப்பார்க்கிறோம்" என்று. படிப்பவர்களையும் உளப்படுத்தி எழுதி இக்காட்சியைச்சித்தரிக்குந்திறமையை என்னென்போம்!

"தமிழ்பாஷைநட்டுகின்ற தாளத்தோடு அவள்நடக்கிறாள். நாமும் பின்தொடர்ந்துபோகிறோம். கடைசியில்(கம்பர்) பக்திரஸத்தில் நம்மைஆழ்த்திவிடுகிறார்" என்று நம்மைக்கலைநயத்தில் ஆழ்த்துகிறார் இக்கலைஞர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# அவருக்கு அன்பளிப்பு.

பரதன்.

சாஸ்திரிகளுக்கும் சர்மாக்களுக்கும் சந்தியாவந்தனபீடமாக இருந்துவந்த சர்வகலாசாலைகளில் சர் கே. வி. ரெட்டிகளும் ரத்னசாமிகளும் நுழைந்தது, அக்ரகார வாசிகளுக்கும் அதனிடம் இலயித்தவர்களுக்கும், அச்சத்தையூட்டி விட்டது ஆச்சரியப்படக்கூடியதல்ல. நெடுநாளாக இருந்துவந்தபிடி தளர்வதைக்கண்டதும் திகில்உண்டாவதுஇயற்கைதான். ஆனால் ஓநாயின் ஓலத்திற்காக ஆட்டுக்குட்டிகளைப்பலியிடுபவன் அறிவுள்ளவனாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டான்.

வடநாட்டு முதலாளியின் பிடியிலிருந்து விலகி தமிழ் நாட்டவருக்குத் தமிழிலேயே தமிழ்த் தினசரி நடத்தும், ஆரியத்திராவிடப்பேதத்தை யறியாத அன்பர் சொக்கலிங்கம் அண்ணாமலைச் சர்வகலாசாலைப்பட்டமளிப்பு விழாவில் கான்பகதூர் கலிபுல்லா ஆற்றிய சொற்பொழிவைக்கண்டிப்பதன் மூலம் ஆரியரின் ஆசீர்வாதத்தைப்பெற ஆசைப்படுகிறார். ஜனாப் கலிபுல்லா அவர்களை ஏகாதிபத்திய தாசரென்று காங்கிரஸ் ஏடுகள் பல வாண்டுகளாகத்தூற்றிவந்தன. அந்தச்சமயங்களில் அஞ்சாநெஞ்சுபடைத்த ஜனாப் கலிபுல்லா அந்த அறிவிலிகளுக்கு ஆணித்தரமாகப் பதில் தந்திருக்கிறார். இன்று அவர் புதுக்கோட்டையில் உத்யோகத்திலிருப்பதால் இந்த உலுத்தர்களின் உளறலுக்குப்பதில் உரைத்திடமுடியாத நிலையிலிருக்கிறார் என்ற தைரியத்தால், தினசரி தனது தீட்டுகோலை மடமைமையிலே தோய்த்து ஆரியருக்குத்தான் செய்யவேண்டிய கடமை இது என்ற களிப்புடன் கலிபுல்லா பரவசம் என்ற தலைப்பிலே டிசம்பர் 12-ம் தேதி ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறது. ஆரியம் ஆர்ப்பரித்துக்கொண்டிருந்த புதுக்கோட்டையில், சந்தர்ப்பணைக்கும்சமாராதனைக்கும் சௌகர்யமான இடங்கள் சமஸ்தானங்களே என்ற நிலையிலே சனாதனிகள் சொக்கியிருந்த நேரத்தில், கான்பகதூர் கலிபுல்லா புதுக்கோட்டையில் பதவி ஏற்றார், ஆரியம் அலறத்தொடங்கிற்று. பிறர் வசமிருந்த புதுக்கோட்டை வீரமரபிலுதித்த ஜனாப் கலிபுல்லாவின் வசம் வந்தது அவருக்குமட்டுமல்ல, திராவிடரனைவருக்குமே பரவசம் ஊட்டக்கூடியதுதான். கலிபுல்லா பரவசமடையக்காரணமிருக்கிறது, உரிமையுமுண்டு. வந்தேமாதரத்தொல்லைபத்தந்த வம்பர்கள் வாயடங்கியதைக் கண்டார், இந்தியை நுழைத்து இடர்விளைவித்தவர்கள் இருக்குமிடம் தெரியாமல் போனதைக் கண்டார், எட்டு மாகாணங்களிலே எங்கள் ஆட்சி, என்ற கொட்டுமுழக்குடன் கூவிக்கிடந்த கோணல்சேட்டைக்காரரின் கோல்சாயக்கண்டார், முஸ்லிம் லீகும் ஒரு ஸ்தாபனமா என்று முரட்டுவாதம் பேசியவர்கள் முடிச்சவிழ்த்து அகப்பட்டுக்கொண்டவன் உதைபட்டுப் பணிவதைப்போல லீகுக்குப் பணிந்தாக வேண்டுமென்ற நிலை கண்டார், எந்த ஜனாப் ஜின்னாவைத் துராத்மா வென்று தூற்றினர்களோ அவருடைய வாயிற்படியிலே மகாத்மா காத்துக்கிடக்கக்கண்டார், பாகிஸ்தானத்திற்குப் பகைவராகக் காட்சியளித்த ஆச்சாரியார் அதன் பரமபாகவதராகிவிட்டதைக்கண்டார், புலி பூனையாகிவிட்டதைக்கண்ட ஜனாப் கலிபுல்லாவுக்கு ஏன்பரவசம் உண்டாகாது? அவருடைய பரவசத்தைக்கண்டு பிறர் வசத்திலே புத்தியை ஒப்படைத்தவர்கள் கண்ணைப்பிசைந்துக்கைகளை உதறிக்கொள்வதிலே என்னபலன்? ஜனாப் கலிபுல்லா ஆனந்தமடைவதற்கு அர்த்தமுள்ள காரணங்கள் பல இருக்க அவைகளை மறந்தோ அல்லது மறைத்தோ தினசரி ஆசிரியர் கலிபுல்லாவின் பரவசத்திற்குக் காரணம் பிரிட்டிஷ் ஆட்சியிலே அவருக்குள்ள காதல் என்ற பொருள்படும்படி எழுதியிருப்பது சித்தத்தைப்பிறர் சொத்தாக்கியதன் காரணமாகயிருக்கலாம். ஜனாப் கலிபுல்லாவோ அல்லது எந்தஇஸ்லாமியனோ, திராவிடனோ பிரிட்டிஷ் ஆட்சியிலே காதல் கொள்ளக்காரணமில்லை, நாடாண்ட அந்த இனத்தார் ஏடு தாங்கியவர்களைப்போல பேடி உள்ளம் படைத்தவர்களல்ல, கலிபுல்லாவுக்குத்தெரியும் இன்றைய வேவலின் முன்னோர்கள் முன்னாள் முகலாய சக்கரவர்த்தியின்முன்பு மண்டிபோட்டுச் சலாமிட்டு அனுமதிச்சீட்டு வாங்கிக்கொண்டு இந்தியாவிற்குள் நுழைந்தவர்கள் என்பது. அவருக்கா பிரிட்டிஷ் ஆட்சியிலே பரவசம் பிறக்கும்? அவருக்கு மற்றுமொன்று தெரியும். கஜினி முகம்மதுவின் காலத்திலே சோமநாதர் கோயிலுக்கெதிரிலே வேதியர் கூட்டம் நின்று எதுவோ எப்படியோ ஆகட்டும் எங்கள் உயிர் தப்பினால் போதும் என்று வெட்கங்கெட்டு வேண்டிக்கொண்ட வரலாற்றை அவர் அறிவார். ஆங்கிலேயன் அரியின் அம்சமென்று ஆரியர் அர்ச்சித்ததை யறிவார், காருண்யமிக்க துரையே வருக என்று கனிவுடன்பேசிப் பூசுரர்கள்பூரணகும்பம் எடுத்த கதையையறிவார். இவ்வளவு தெரிந்த கலிபுல்லா அடிமைவாழ்விலே ஆனந்தங்கொள்ளமுடியுமா, கொள்வாரா-என்பதை ஆரிய அடிவருடியே சிந்தித்துப்பார்க்கட்டும். காலரா பரவியிருக்கும் வேளையில் இனாக்குலேஷன் செய்து கொள்ளாவிட்டால் உயிருக்கு ஆபத்து என்று ஒருவர் உரைத்தால் அவர் இனாக்குலேஷனுக்குத்தாசரென்று அர்த்தமல்ல. உலகப் போராட்டம் நடக்கும் இந்த நேரத்தில் பிரிட்டிஷ் பாதுகாப்பு இராமற் போயிருந்தால் இந்தியாவின் கதி என்னவாகியிருக்கும் என்று ஜனாப் கலிபுல்லா கேட்டார் சர்வகலாசாலையிலே. சர்மாகலாசாலையிலே பயின்ற சொக்கலிங்கனாருக்கு இதுகலிபுல்லாவின் அடிமை மனப்பான்மையைக் காட்டுவதாகத் தோற்றுகிறதாம். குயிலைப்பழிக்குமாம்ஆந்தை, கோணல்சேட்டைசெய்யுமாம் குரங்கு, காரணமின்றிக்குலைக்குமாம் குக்கல், கானமென்று கருதிக்கொண்டு கர்துமாம் கர்த்தபம்!

ஜனாப் கலிபுல்லா தம்முடைய பிரசங்கத்தில் 1. தற்கால யுத்த நிலைமை. 2. பிரிட்டிஷ் பாதுகாப்பின் அவசியம், 3, நெருக்கடியான இந்த நேரத்தில் கலவரஞ் செய்வதால் வரும் விபரீதம், 4. நம் நாட்டு நிலைமை, 5. எதிர்கால வாழ்வு என்ற முக்கிய விஷயங்களைவகுத்துத் தொகுத்துப் பேசியிருக்கிறார். மாணவர்களிடத்திலே யுத்தப்பிரசாரம்செய்கிறார் ஜனாப் கலிபுல்லா இதை ஒரு மகத்தான காரியமாகக் கருதுகிறார் என்று ஏளனமாக எழுதுகிறது தினசரி எனும் ஏடு. உலக நெருக்கடியையும் அதனால் நம்நாட்டுக்கு நேரிடக்கூடிய கேடுகளையும் மறந்த விந்தை மனத்தினர்மாணவர்களிடையே விபரீத வித்துக்களை முன்புதூவினார்கள். அதன் விளைவாகப் பள்ளிகள் களங்களாயின, மாணவர் பாழாயினர். தீயவழியிலே, தீயர்களால் அழைத்துச்செல்லப்பட்ட மாணவர்களைப்பகுத்தறிவுப் பாதைக்குத் திருப்பியழைத்துவரும்பணி அறிவோடு கலந்த அவசியம் என்பதை அறிவு அவசியமில்லை என்று எண்ணுகிறவர்கள் தவிர மற்றவர்கள்ஏற்றுக்கொள்வார்கள். தினசரி இதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. பரிதாபமான நிலைமை!

ஜப்பானிய சாம்ராஜ்யக்கனவு அழிந்தாலொழிய இந்தியாவுக்கு இடர் நீங்காது என்று கலிபுல்லாபேசினார். அது உண்மைதான். ஆனால் இதனை எமது தலைவர்கள் முன்னமேயே உணர்ந்து பேசியிருக்கிறார்கள் என்று தினசரிகூறுகிறது. உணர்ந்துமிருக்கலாம்உரைத்துமிருக்கலாம்,ஊரறிய உரத்தகுரலிலேபேசியுமிருக்கலாம்,ஆனால், அந்தஆபத்தைத்தடுக்க அந்தஅசகாயசூரர்கள்அகிம்சையையும்ராட்டினம் தக்ளியையும் நம்பிக்கொண்டிருந்தார்களே தவிர ஜனாப்கலிபுல்லாவும் அவர் போன்றாரும் இலட்சக்கணக்கிலே படையிலேசேர்ந்து போர்வீரராகுங்கள்! நாட்டுச் சுதந்திரத்தைக்காப்பாற்றுவதற்குவினையுத்தமுறைகளைக்கற்றுக் கொள்ளுங்கள்! இந்தப்பெரும் போரையே ஒருவாய்ப்பாகக் கருதி மேனாட்டுப்போர்முறைகளைக் கற்றுக்

(8ம் பக்கம் பார்க்க)

## அவருக்கு அன்பளிப்பு.

7-ம் பக்கத் தொடர்ச்சி.

கொள்ளுங்கள்! என்ற நல்லுரையைவழங்கிய நேரத்தில் தினசரியின் தலைவர்கள் பட்டாளத்தில் சேராதே என்ற பைத்யக்கார சிந்து பாடிக்காலங் கழித்தார்கள். இந்தியப்போரிலேயே பெரிய மாறுதல் உண்டானதற்குக்காரணம் இந்தியப் போர்வீரர்களின் வீரம் என்று இன்று எழுதுகிறது தினசரி. ஆனல், அந்தப் போர் வீரர்களின் அணிவகுப்பு அறிவு படைத்த கலிபுல்லா போன்றவர்களால் அமைக்கப்பட்ட நேரத்தில் இந்தஅகிம்சாவாதிகள் அந்த முயற்சியை இழித்தும் பழித்தும் பேசினர்கள். விண்ணிலே, மண்ணிலே, கடலிலே, இந்திய வீரர்கள் இரத்தத்தைச்சிந்தியநேரத்தில் இங்கே தினசரிக் கூட்டத்தார் அந்த வீரர்களைக் கூலிகளென்று கேலிபேசினர். இந்திய வீரர்களின் மகத்தான சேவையினல் உலக யுத்தப்போக்கிலேயே ஓர் மாறுதல் ஏற்பட்டது என்று இன்று மார்தட்டும் தினசரிக்கூட்டத்தார் அன்று மடமையின்முன் மண்டியிட்டுக்கிடந்தனர் மகாத்மாவின் கட்டளைக்கிணங்க. இந்தியவீரர்களால் இவ்வளவு சாதிக்கமுடியும் என்பதை முன்கூட்டியேயறிந்த கலிபுல்லாக்கள் போர் ஆரம்பமானவுடனே படையிலே ஆள் சேர்த்தார்கள், அதற்கு அன்று தடைவிளைவித்தத் தினசரிக்கூட்டம் இன்று திருப்பல்லாண்டுபாடுகிறது. நேரங்கழித்துவந்த இந்தமதியாவது தேயாது நிலைத்து நிற்கட்டும்.

எதிரியைப் பிரிட்டிஷாரின்தயவின்றி ஓட்டமுடியாத நிலையிலே இந்தியாஇருப்பதற்குக்காரணம் 150 வருஷமாக வெள்ளையர் இந்த நாட்டை யாள்வதுதான் என்று தினசரி கூறுகிறது, இதிலே கொஞ்சம் உண்மை ஊசலாடுகிறது என்றாலும்வீரமனப்பான்மையை நமது மக்கள் அடியோடு இழந்துவிட்டதற்குப் பெருங் காரணம் வார்தாவே தவிர லண்டனல்ல. வீரத்தை இன்று புகழும் இந்த வீணர்கள் விவேகத்தோடு வீரர்களுக்கு அழைப்பு அனுப்பிய கலிபுல்லாக்களைக் கண்டு வெட்கத்தால் தலைகுனிய வேண்டும் மனச்சாட்சியை மதிப்பவர்களானல். கலிபுல்லாவின் சர்வகலாசாலைப் பிரசங்கத்திலே வீரர்களின் அவசியத்தையும் வீரத்தின் மேன்மையையும் விளக்க அவர் அளித்துள்ள அருமையான பகுதியைத் தினசரி ஆசிரியருக்கு அன்பளிப்பாகத் தருவது அவசியமாகிறது. ஜனப் கலிபுல்லா அன்று சொன்னர், "நாட்டுச் சரித்திரத்தை யுண்டாக்கியவர்கள், அசோகர் அக்பர், சிவாஜி போன்ற வீரபுருஷர்களேயன்றி விசுவாமித்திரர், பாரத்துவாசர்போன்றவர்களல்ல"என்று. இதன் பொருள் வீரவழிபாடு அவசியமே தவிர ஆரிய முனிவர்களின் அடிதொழுவது அல்ல என்பதுதானே. இந்தஒரு வாசகம் ஆரியத்தின் சீற்றத்துக்கு அடிப்படையான காரணம். ஆண்மையைப் போற்றினர், ஆரியத்தைப் பரிகசித்தார் என்பது வைதிகரின் வயிற்றெரிச்சலுக்குக் காரணம். வைதீகத்திற்கு வால்பிடிக்கும் வம்பர்கூட்டம் கலிபுல்லா வைத்தூற்றுவதற்குக்காரணம் ஆரிய ஆலிங்கனத்தால் அவர்கள் தமது அறிவை இழந்திருப்பது தான்.

—

## வைத்திய வேவல்

5-ம் பக்கத் தொடர்ச்சி.

கிடைப்பதேது! இஸ்லாமிய திராவிட இனங்கள் ஆரோக்கியத்தைப் பெறவும் இன முன்னேற்றத்திற் குழைக்கவும் நல்ல காற்றோட்டமுள்ள இடங்களைக் கேட்கிறார்கள், ஆனல், ஆரோக்கியத்திற்கு வழிசொல்லும் ஆங்கில அறிஞர் ஆரோக்கியஸ்தான் பெறுவதை ஆபத்தானதென்றும் சொல்லுகிறார். இந்தவிசித்திரத்தை என்னென்பது! பிரிட்டிஷாரின் நல்லெண்ணத்திலே நம்பிக்கை வையுங்கள், அந்த ஒரு மருந்தேபோதும் என்றுவைஸ்ராய் கூறுகிறார். அந்த நல்லெண்ணம் இருக்கும் இருக்கும் என்று மனப்பால் குடிக்க மக்கள் இன்று தயாரில்லை. நோய்வகையும் தெரியாது நாடிப்பரீட்சையும் அறியாது நல்லமருந்து முறையும் அறியாத வைத்தியர் நோயாளியின் கையிலே மஞ்சள் துணியைக்கட்டுவதும், வாயிலே துளசிதீர்த்தத்தை ஊற்றுவதும் சில இடங்களிலே நடக்கக்காண்கிறோம். வைஸ்ராய் வேவலினுடைய வைத்திய முறையும் இதுபோலத்தானிருக்கிறது,

—

## சுயமரியாதை வாசிப்புச்சாலை

### கோட்டாறு.

நாளது (28—12—44) வியாழனன்று மாலை 5-மணிக்கு கோட்டாறு சமரச வீதியில் தோழர்களான K. அன்பழகன் B. A; Hons. (தமிழ் விரிவுரையாளர் பச்சையப்பன் கல்லூரி, சென்னை) R. நெடுஞ்செழியன் B. A; Hons. P. ஜெனுர்த்தனம் (M. A; வகுப்பு மாணவர் பச்சையப்பன் கல்லூரி சென்னை) முதலியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். தமிழர்கலை, மொழி, நாகரீகம் முதலியவை பற்றிப் பேசப்படுமாதலால் தோழர்களும் மாணவர்களும் திரண்டுவரவேண்டுகின்றோம்.

S. பூதலிங்கம். A. குமாரவேல்,
செயலாளர்கள்.

### போத்தனூர்

10-12-44ல் டை யூர் திராவிடர் கழக அமைப்புக் கூட்டங்கூடி கழக அலுவலர்களையும் உறுப்பினர்களையும்தேர்ந்தெடுக்கப்பட்டது.

—

## திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி)த் தலைவர் பெரியார்ஈ.வே.ரா. அறிக்கை.

ஜஸ்டிஸ் கட்சியின் வளர்ச்சியைப் பார்த்தபின் தோழர்களான பி. பாலசுப்ரமணியம், ஆர். கே, சண்முகம், பி. ராமச்சந்திரரெட்டி ஆகியோரும் மற்றும் சிலரும் தாங்கள் ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக்கமிட்டி மெம்பர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகிறார்களென்று சில பத்திரிகைகள் மூலம் எனக்குத்தெரிகிறது. தோழர். பி. ராமச்சந்திரரெட்டி தற்காலிகத்தலைவர் என்றும், சில சமயங்களில் அவர் டெபுடி லீடரென்றும், ராவ் பகதூர் எ. துரைசாமி முதலியார் கன்வீனரென்றும், தோழர் பாலசுப்ரமணியம் ஆர்கனைசரென்றும் இன்னும் இதை போலப்பலமாதிரியாகவும் அவர்கள் சொல்லி வருகிறார்கள். சீக்கிரத்தில்இவர்கள் ஒரு ஜஸ்டிஸ் கட்சி மகாநாடும் கூட்டப்போகிறார்களென்றும் தெரிகிறது.

அவர்களுடைய அறிக்கைகளும்நோட்டீஸ்களும் ஜஸ்டிஸ் கட்சியை அதாவது தென்னிந்திய நலஉரிமைச்சங்கம் அதாவது சேலம் மகாநாட்டில் பேர் மாற்றப்பட்டபடி திராவிடர் கழகத்தைக் கட்டுப்படுத்தாதெனப் பொது மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும் ஜஸ்டிஸ் கட்சியின் பெயரால் இதுபோன்ற செய்திகள் வெளியிடவும் அவர்களுக்கு உரிமையில்லை. ஆகவே பொதுமக்கள் இம்மாதிரிச் செய்திகளைக் கண்டு ஏமாந்து போகாதபடி எச்சரிக்க விரும்புகிறேன்.

ஈ. வே. இராமசாமி தலைவர் & லீடர்,
திராவிடர் கழகம்.
(ஜஸ்டிஸ் கட்சி)

## கம்பன் மலர்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதன் கண்ணே ரஸமான, ராக்ஷச, தமிழ்பாஷை தாண்டவமாடுவது கண்கூடு, அதைத்தான்புலவர்ரசிக்கிறர். இதில் தமிழ்மொழியேதாளம் போடுகிறது என்றுசொன்னல்யாரும் மறுக்கமுடியாது.

இதனை, மாணவர்கள்படிக்கவேண்டுமா? படித்துத்தான் பலன் என்ன? காணும்பிழைகளை (ஒற்றுக்கள்மிகுவதனை, மாணவர்கள்நீக்கும் வகையென்ன? இம்முறையை மாணவர்கள் எடுத்துக்காட்டாகக்கொள்வார்களானல், ஆசிரியர்கள் அவர்களை எங்ஙனம் திருத்துதல்இயலும்? இலக்கணப்பிழையை வளர்ப்பதற்கன்றி வேறு எதற்குஇதனைத்துணை கொள்ள முடியும்? புலவர் பெருமக்களே! இவ்வாறு எழுதும்முறையினை நீவிர் ஒத்துக்கொள்கின்றீர்களா? அன்றித், தவறென்றால் நீவிர் எடுத்துரையாதிருக்கும் மர்மம் என்ன? அறியாததா? அன்றி அறிந்தும் அறிவிக்கும் ஆண்மையற்றதன்மையா? இல்லையேல்கம்பக்காதல்கண்ணை விழ்துவிட்டதா?கழறுமின்.(தொடரும்.)

—

# "விடுதலைவீரர் அம்பேத்கார் வகுத்தவழி நடப்போம்"

## தாழ்த்தப்பட்டோருக்கு வேண்டுகோள்.

3—12—44ல் சென்னை செயிண்ட் ஜேவியர் தெரு நாகம்மாள் பள்ளியில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் திறப்புவிழாவில், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படத்தைத் திறந்துவைத்த A. I. A. கனகரத்தினம் அம்மையாரின் சொற்பொழிவு.

தலைவர்களே, தோழர்களே, கர்வம் பிடித்த மூடவைதீக மனப்பான்மைகளாலும், செல்வச்செருக்கினாலும், தாழ்த்தப்பட்ட மக்களாகிய நாம் படுபாதாளத்தில் தள்ளப்பட்டு, சீரழிந்து, உடல் மெலிந்து பார்க்கப் பரிதாபமாக இருக்கிறதென்றுஉரைக்கப்பட்டது இன்றல்ல, சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால்.

முதுகெலும்பு ஒடிய, கால்வயிறு கஞ்சிகூட இல்லாமல் உழைப்பது தாழ்த்தப்பட்ட மக்கள், உண்டு பூரித்து இறுமாந்து ஏப்பம் விட்டு வாழ்வது ஜாதி இந்துமக்கள், என்ற நிலைமையைக் கண்டித்தது இன்றல்ல, சுமார் 50ஆண்டுகளுக்கு முன்னால்.

இந்த கோரக் காட்சியையும் பரிதபிக்கும் நிலைமையையும் ஒவ்வொருதாழ்த்தப்பட்டவரும் நினைக்கும்போது ரத்தம் கொதிக்கிறது உடல் நடுங்குகிறது. நிலைமை இவ்வாறுஇருக்ககணக்கிட்டுச்சொல்லும் ஒரு சிலர் நாம் படித்துவிட்டோம், முன்னேற்றம் அடைந்து விட்டோம் பதவி வகித்துவிட்டோம் என்று நினைப்பார்களேயானால் அது அவர்களின் மடமையாகும் அல்லது அறியாமையாகும்.

இன்று தாழ்த்தப்பட்ட மக்களால் தனிப்பெரும் தலைவா என்று ஒப்புக்கொள்ளப்பட்டவர் டாக்டர் அம்பேத்கார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று உயிர்வாழும் தியாகமூர்த்தி, தன் காலத்திலேயே தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையைக் காணவேண்டும் என்று கங்கணம் கட்டியிருக்கிறார் நமது ஒப்பற்ற தலைவர் டாக்டர் அம்பேத்கார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் சேற்றிலேயே வாழ உரிமை பெற்றவர்கள், என்று மனக்கோட்டை கட்டி வாழ்ந்து வந்த, பகுத்தறிவு கொஞ்சமும் இல்லாத ஜாதி இந்துக்களின் காலத்திலேயே, அதாவது சுமார் 50 ஆண்டுகளுக்கு முன், நம் ஒப்பற்ற தலைவர், தனிப்பெருந்தலைவர், தாழ்த்தப்பட்ட மக்களின் முடி சூடா மன்னர், அறிவின் களஞ்சியம், கர்மவீரன், அஞ்சா உள்ளம் படைத்த டாக்டர் அம்பேத்கார் பம்பாயில் பிறந்தார். 19-ம் வயதிலே கல்லூரி பட்டம் பெற்றார்.

தீண்டப்படாதவராகிய பட்டம்பெற்ற இளைஞர்இடத்திலேசுதந்திரக்கனல்பற்றி எரிவதைபரோடாமன்னர்கண்டார். தன் தாய்நாட்டின்பாதகச்செயல்களை அறிந்து டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு உள்ளம் கனிந்து உதவி செய்ய மன்னர் முன் வந்தார்.

பரோடா மன்னரின் அன்பு மிகுதியாலும் ஆதரவாலும், அம்பேத்கார் அவர்கள் அமெரிக்காவுக்குச்சென்று, கொலம்பியா பல்கலைக் கழகத்திலே சேர்ந்து படித்தார். அமெரிக்கா நாட்டின் சமுதாயத்தை அறிய டாக்டர் அவர்களுக்கு பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டது, தன்தாய் நாட்டின் நிலைமையும் தன் சமுகத்தின் நிலைமையும் அமெரிக்கர்களுக்கு சமயம் வாய்த்தபோதெல்லாம் எடுத்துரைத்து அவர்களின் ஆதரவைத் தேடிவந்தார்.

கொலம்பியா பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டமும் டாக்டர் பட்டமும் பெற்று அறிவின் இருப்பிடமாகத்திகழ்ந்தார். பிறகு இங்கிலாந்திலிருந்து பொருளாதாரஆராய்ச்சியிலீடுபட்டு வந்தார். சில நாட்கள் சென்ற பிறகு செர்மனியிலிருக்கும் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து வாசித்தார். இதோடுஅவருடையஅறிவுத் தாகம் அடங்கவில்லை. மீண்டும் இங்கிலாந்து சென்று லண்டன் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து பொருளாதாரத்திலும் வர்த்தகத்திலும் முறையே டாக்டர் பட்டம் பெற்றார்.

ஞானச் சுடராகிய டாக்டர் அவர்கள் மூன்று கழகங்களில் பட்டம் பெற்று 1923—ல் தாய் நாடு திரும்பினார். ஆனால் தாய்நாடு அவருக்குக்கொடுத்த வரவேற்பு கொடூரம், கொடூரம். அவர் பொது தெருக்களில் நடக்க உரிமையில்லை படித்தவன் என்ற மரியாதையும் இல்லை டாக்டர் அவர்களுக்கு மேலும் துன்பம் விளைவித்தார்கள். தனக்கு நடந்த வரவேற்பைக்கண்டு கண்ணீர் பெருக்கினார்.

கல்வியில் M. A. பட்டம் பெற்ற ஒரு அறிஞருக்கு பிறநாட்டு சர்வகலாசாலைகளால் டாக்டர் பட்டம் வழங்கப்பட்ட ஒரு விற்பன்னர் நீதி மன்றத்திலே சட்டத்தை அலசி பேசக் கூடிய திறமை பெற்ற ஓர்பாரிஸ்டருக்கு அன்று ஜாதி வெறிபிடித்த வைதீக சமுதாயம் தீண்டப்படாதார் குலத்தில் பிறந்தார் என்றதற்காக செய்த கொடுமைகள் இருதயத்தைப்பிளக்கும் தன்மையானவை.

குடியிருக்க வீடு கொடுக்க மறுத்தார்கள், ஒழுங்கான வேலையில் சேரமுடியாதபடி செய்தார்கள் பகுத்தறிவு இல்லாத ஜாதி இந்துக்கள். யாரால் இந்தக் கொடுமையைப்பொறுக்க முடியும். டாக்டர் அவர்களுக்கு ஜாதிஇந்துக்களிடம் மனம் கசந்தது வெறுப்பு அதிகமாயிற்று.

பரோடா மன்னர் அரசாங்கத்தில் வேலை பார்த்தார் டாக்டர் அவர்கள். அங்கும் ஜாதி வெறி தலைவிரித்தாடியது. மேல் அதிகாரிகள் காட்டிய அவமரியாதைகளை டாக்டர் அவர்களால்பொறுக்க முடியாமல் போனது. காசுக்காக, பட்டத்திற்காக, பதவிக்காக தன் சுயமரியாதையை இழக்க விரும்பவில்லை.

வேலையை உதறிவிட்டு பம்பாய் வந்து பாரிஸ்டர் தொழில் நடத்தினர், நுண்ணறிவுபெற்ற டாக்டர் தன் தொழிலிலே பிரபலமடைந்தார் தன் நிலை உயர்ந்த பிறகு துர்பாக்கியமான தனது சமுகத்தை அவர் மறக்கவே இல்லை.

ஒரு பெரிய கூட்டத்திலே ஜாதி இந்துக்களைப்பார்த்து "உன்னை உணவு அரைவயிற்றுக்குக் கொடுக்கிறாய்! உடுக்கக் கோவணம் போதும் என்று வாதாடுகிறாய்? ஏ! ஜாதி இந்துவே நீ குடிப்பதற்கு தண்ணீர் எடுக்கிறாயே அங்குகூட நாங்கள் தண்ணீர் எடுக்கக்கூடாதா?" என்று மார்தட்டிக்கேட்டார் டாக்டர்.

ஆண்டைக் கும்பல்களானஉங்களுக்கு சாவுமணி அடிக்கிறேன் என்று அறைகூவிய உண்மைப்பறையன்தான்டாக்டர் அம்பேத்கார்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னே தாழ்த்தப்பட்டசமுகத்திற்காக. "பகிஷ்க்ரித் ஹிதாகரினி சபா" என்ற ஓர் ஸ்தாபனத்தை ஏற்படுத்தி பத்திரிக்கையையும் நடத்தி வந்தார்.

தனி முறையில் எண்ணாயிரம் புத்தகங்களைக்கொண்ட ஓர் நூல் நிலையத்தைத் தயாரித்துக்கொண்டு பல துறையிலும் ஆராய்ச்சி செய்து, வருகிறார். அவசியமான காலங்களில் பல புத்தகங்களையும் எழுதி வெளியிட்டு உதவி இருக்கிறார். வட்டமேசை மாநாட்டில் டாக்டர் அவர்கள் செய்த சேவையும் மற்ற மகாசபைகளும், சமுகங்களும் செய்யும் அட்டகாசங்களைத்தெளிவுபடுத்தியதும் ஒவ்வொரு தாழ்த்தப்பட்டவர்களும் மறக்கமுடியாத செய்கைகளாகும்

1933-ல் டாக்டர் அவர்கள் தாழ்த்தப்பட்டார் சம்மேளனத்தைபம்பாயில்கூட்டி, இந்துக்களுடைய கும்பலிலிருந்து விலகி, கிருஸ்தவர்களாகவோ முஸ்லிம்களாகவோ மதம் மாறும்படி அகிலஇந்திய தாழ்த்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டார்.

(10ம் பக்கம் பார்க்க)

## "விடுதலைவீரர் அம்பேத்கார்

9-ம் பக்கத் தொடர்ச்சி.

வேதம் புராணம் முதலியவைகள் மனிதனை அடிமைப்படுத்துவது அறிவை மங்கவைப்பது என்று அடிக்கடி எடுத்துக் காட்டி வருகிறார்.

நமது டாக்டர் அவர்கள் பார்ப்பனர், ஜாதி இந்துக்கள். முதலாளிகள், முதலியவர்களிடத்தில் தொடர்ந்து போர் செய்துகொண்டு வருகிறார்.

தாழ்த்தப்பட்ட மக்களாகிய நாம் இன்று டாக்டர் அவர்கள் சொல்லைக் காரியத்தில் காட்டுவது கடமையாகும்.

டாக்டர் அம்பேத்கார் அவர்களும், அகில இந்திய தாழ்த்தப்பட்டார் சம்மேளனத்துத் தலைவர் ராவ்பகதூர் என் சிவராஜ் அவர்களும் சேர்ந்து துவக்கிய சம்மேளனத்தை ஒவ்வொரு கிராமத்திலும் நிறுவ ஏற்பாடு செய்ய இன்று தீர்மானம் செய்து கொள்வோம். தாழ்த்தப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள்.

—

## சென்னையிலே!

இன்றுவரை 1200 உறுப்பினர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளார்கள். மற்றும் சென்னையின் பல வட்டங்களிலுமுள்ள முக்கிய தோழர்களிடம் சுமார் 1000 இரசீதுகள்வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரத்திற்கு மேற்பட்டு சேர்ந்துவிட்டதால் நமது வேலை பூர்த்தியாகிவிட்டதென்று சில தோழர்கள் கருதுவதாகத் தெரிகிறது. இது போதுமா? சென்னை மாகாணத்திற்குத் தலைநகராய சென்னை நகரிலே, இம்மாத முடிவுக்குள் குறைந்தது 3000 உறுப்பினர்களையாவது சேர்க்கப்படாவிடில் சென்னைத் தோழர்களாகிய நமது (தொண்டு) வெற்றிகரமாகமுடிந்தது என்று கூறுவதற்கோ அன்றி கருதுவதற்கோ இடமில்லையல்லவா?

எனவே இரசீது புத்தகங்கள் பெற்றுள்ள நமது தோழர்கள் தயவுசெய்து உடனே யாவற்றையும் பூர்த்தி செய்து (ஒவ்வொரு புத்தகமாகிலும்) ஜில்லா தலைமை ஆபீஸ் இரசீதுகளுடனும் அதற்கான கட்டணங்களுடனும் சேர்த்து என்னிடமாகிலும் அல்லது தங்கசாலைத் தெரு சுமைதாங்கி எதிரிலுள்ள நியூஸ் பேப்பர் மார்ட் தோழர் டி. மகாதேவன் அவர்களிடமாவது கொடுக்குமாறு மிகவும் கேட்டுக்கொள்வதுடன், மேலும் இரசீது புத்தகங்கள் பெற்று உறுப்பினர்களைச் சேர்க்குமாறும் வேண்டிக்கொள்கிறேன்.

என். வி. என்.
கூட்டுக்காரியதரிசி,
சென்னைஜில்லா திராவிடர் கழகம்.

## காஞ்சிபுரம் ஜவுளி வியாபாரிகள் சங்கம்.

1944 ஞு டிசம்பர் மாதம் 7-ந்தேதி வியாழக்கிழமை இரவு 7-மணிக்கு காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை ஜவுளிக்கடைசத்திரத்தில்கூடிய காஞ்சிபுரம் ஜவுளி வியாபாரிகளின் மகாசபை தோழர், M. T. இராஜமாணிக்ச் செட்டியார் அவர்களின் தலைமையில்நடந்தது கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்களையும் டைரக்டர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தோழர்கள்;—

M. T. இராஜமாணிக்க செட்டியார் (தலைவர்). A. K. தங்கவேல் முதலியார் (உபதலைவர்), S. கோதண்டராமன் (காரியதரிசி), S. எல்லப்ப முதலியார் (பொக்கிஷதாரர்), T. அப்பாய் செட்டியார் K. R. கெங்காதர முதலியார், M. V. M. பச்சையப்ப முதலியார், A. விஸ்வநாத முதலியார், R. தங்கவேல் முதலியார், M. காளத்தி முதலியார், R. முருகப்பசெட்டியார், M. K. சோமசுந்தர முதலியார், A. E. T. A. குப்புசாமி முதலியார் B. லக்ஷ்மையப் செட்டியார், R. இரங்கநாத முதலியார், V. கண்ணப்பிள்ளை, S. நடேசமுதலியார், R. இராமசாமிமுதலியார், P. A. இராமலிங்க முதலியார், R. ஆதிநாராயண முதலியார், S. சாமிநாத முதலியார். ஆகியோர் நிர்வாகஸ்தர்கள்.

கைத்தறியில் தயாரிக்கப்பட்ட ஜவுளிகளை வாங்கும்விலையும் விற்கும்விலையும் குறிப்பிடும்படி சர்க்கார் தெரிவிக்கும் உத்திரவிற்கு ஒரு தீர்மானமும் செய்து அனுப்பப்பட்டது.

—

## கலகம் இல்லை!

4-ம் பக்கத் தொடர்ச்சி

யிலே விசேஷ நிபுணத்துவம்இருப்பதால் அவர் மந்திரியானால் மாகாணத்துக்கு நன்மை கிடைக்கும் என்று முதலமைச்சர் எண்ணினார். மிஸ்டர் ரோஜர்தாமஸ், தமக்குக்கட்சிப் பூசல்களிலே அக்கறை கிடையாதென்றும், பணத்தைக் குறியாகக்கொண்டும் தாம் பதவியை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் விளக்கமாகவே கூறினார், என்றாலும், இந்த நியமனம், காங்கிரஸ்காரர்களுக்கு வசைபுராணம் பாட ஒரு வாய்ப்பாகக் கிடைத்துவிட்டது. லீக் மந்தரிசபைக்கு ஆட்டம்கண்டுவிட்டது. ஆகவே வெள்ளைக்காரருடன் கூட்டு போட்டால்தான் உயிர் தப்பும் என்று, லீக் மந்திரிசபைத்தலைவர், ரோஜர்தாமஸ் என்றவெள்ளையருக்குமந்திரி வேலை கொடுத்திருக்கிறார். இது வெட்கக்கேடு!—என்று வெளுத்துவாங்கியிருக்கின்றன. பார்த்தார்ஜனாப்ஜின்னா இந்தப் "பாவிகள்" இவ்விதமாகப் பழிபோட்டுக் கழுத்தை அறுப்பார்கள் என்பதைத் தெரிந்துக்கொள்ளாமல் தாமஸ்துரையை, மந்திரியாக நியமித்துவிட்டாரே சிந்து முதலமைச்சர் இதனால்வீணான வசைமொழிகேட்க வேண்டிஇருக்கிறது. லீகுக்கும் பங்கம் வரும்போலிருக்கிறதே, என்றுயோசித்தார். உடனே தந்திகொடுத்தார் சிந்து முதலமைச்சருக்கு. இருவரும் கூடிப் பேசினர். இதனால் வங்கத்திலேநடந்தது போன்று ஒரு குட்டிக்கலகம், பாஞ்சாலத்திலே நடைபெற்றதுபோல ஒருகலகம், நேரிடக்கூடும், என்று காங்கிரஸ் வட்டாரம்மிகஆவலாகக் கார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் சிந்து முதலமைச்சரிடம்பேசினதிலே, திருப்திகரமான முடிவுஏற்பட்டுவிட்டது என்று ஜனாப்ஜின்னா,அவர்களின்வாயைஅடைப்பதுபோல அறிக்கைவெளியிட்டார். அந்தப்பேச்சின்பிறகு, மிஸ்டர் ரோஜர் தாமஸ், மந்திரிவேலையை ராஜினாமாச் செய்துவிட்டார், ஆனால் அவருடைய அரியதிறமை சிந்து மாகாணத்துக்குப் பயன்படாமலிருக்கக்கூடாதென்பதற்காக அவர், சர்க்காருக்கு ஒரு ஆலோசனையாளராக நியமிக்கப்பட்டார். மந்திரிவேலைதந்து, சிலநாட்களிலே அதனை ராஜிநாமாச்செய்யும்படிநேரிட்டது குறித்து, மனத்தாங்கல் கொள்ளாமல், கடைமையை நிறைவேற்றமுன்வந்தார் ரோஜர்தாமஸ். கலகம்தவிர்க்கப்பட்டது, லீகின் கண்ணியமும் காப்பாற்றப்பட்டது.

—

## நீத்தார் நினைவு நாள்.

திண்டிவனம் திராவிடர் கழக அமைச்சர் தோழர் அப்பாண்டநாதன் தந்தையார் தோழர் சம்பத்ராவ் 11-12-44ல் இயற்கை எய்தியதன்பொருட்டு ஷையார் இல்லத்தில் தோழர் குலசேகரதாஸ் தலைமையில் நீத்தார் நினைவுநாள் கொண்டாடப்பட்டபோது திராவிட நாடு இதழுக்கு ரூ, 1—0—0 நன்கொடை தரப்பட்டது,

—

## திருமணம்

### கடலூர்

4—12—44ல் இவ்வூர் வள்ளலாருக்கும் பாகூர் தனலட்சுமி அம்மையாருக்கும் ஔவை துரைசாமி, வெள்ளைவாரணர் இவர்கள் சீர்திருத்தத் திருமணத்தை நடத்தி வைத்தார்கள்.

### காரைக்கால்

1-12-44ல் இவ்வூர் பிரஞ்சிந்திய முஸ்லிம் லீக் தோழர் செ. மு. ஜெக்கரியா மரைக்காயர் தலைமையில் கூடிய கூட்டத்தில் தோழர் A. M. சாலிஹ மரைக்காயரைத் தலைவராகவும், M. சஹீத் கமால் துணைத்தலைவராகவும், M. K. A. ரஜாக்ஷா, A. K. A. அப்துஸ்ஸமத் செயலாளர்களாகவும்தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

## பார்வதி பி. ஏ;

(2-ம் பக்கத் தொடர்ச்சி.)

காகக் கொன்றவன் என்ற குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டகைதி, அதிகாலையிலே அளிக்கப்படும் அரிசிக் கஞ்சியைச் சூரிய நாராயணனுக்கு நிவேதனம் செய்யாமுன்பு சாப்பிடமாட்டான், அவ்விதமான பக்திமான்களாகவும் சிறையிலே இருப்பர். பல்வேறு வகை அவர்கள், பலவேறு போக்கு. பேச்சும் பலரகம்.ஆனல். பார்த்திபனிடம் அவர்கள் யாவரும் கொஞ்சம் மரியாதையே காட்டுவது வாடிக்கை. "அவனுக்கு என்னப்பா குறை! பணம் இருக்கிறது" என்று கூறுவர், மெல்லியகுரலிலே.சிறையிலேஅடைபட்ட நேரத்திலுங்கூடச் செல்வவாணிடம் ஏழை சற்று அடங்கியே நடக்க வேண்டி இருந்தது, கூண்டிலே இருப்பினும் சிங்கத்திடம், பயந்து மனிதர் இருப்பது போல! நீதியின் கோல்தவறுது என்ற நம்பிக்கையற்ற உள்ளம் பெரும்பாலான மக்களுக்கு இருக்கிறது. காரணம் பணத்தின் ஆதிக்கம் பல்பல அதிசயங்களைச் செய்து முடிப்பதைப் பார்த்துப் பார்த்து மக்கள் திகைப்படைந்து விட்டிருக்கின்றனர். இந்தத் திகைப்புதான் சிறையிலே, பார்த்திபனைக்கண்டதும், மற்றவர்கள், மதிக்கும்படிசெய்தது.

துப்பறியும் பிரமநாயகம் தமது பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். முதலமைச்சர், வேறு ஒருவரை நியமித்து விட்டார். இந்தச்செய்தி பத்திரிகையிலே வெளிவந்தபோது ஊரிலே ஒருபரபரப்பு ஏற்பட்டது. கீர்த்திவாய்ந்த பிரமநாயகத்தாலேயே முடியாத காரியத்தை வேறு யார் சாதிக்க முடியும் என்று ஜனங்கள் பேசிக்கொண்டனர். பிரமநாயகத்தின் ராஜிநாமாவால் உண்டான பரபரப்பு அடங்குவதற்குள், வேறோர்செய்திவெளிவந்தது, மக்களைத்தூக்கி வாரிப்போடும் படியானசெய்தி.

**பார்த்திபன் கம்பிநீட்டினன்!**

**சிறையிலிருந்து ஓடிவிட்டான்!**

**புரட்சிக்காரரின்வேலையா?**

என்ற கொட்டைஎழுத்துத் தலைப்புகளுடன், பார்த்திபன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டசெய்திவெளிவந்தது. மந்திரி சபைமருண்டது! மக்கள் கொதித்தனர்! பார்த்திபன் ஓடிவிட்டான்! ஓடிவிட்டான் என்ற காட்டுத்தீபரவி, ஊரைக் கலக்கிவிட்டது.

"எப்படியோ தப்பித்துக்கொண்டுஓடி விட்டானமே"

"அவன் ஜாலக்காரனச்சே, இரும்புக் கம்பிகள் அவனுக்குக் கேவலம் துரும்புதான்!"

"பணம்பாருங்களய்யா! சிறையிலே போட்டுப்பூட்டினல்கூட,வெளியேவந்து விடுகிறது."

"குபேரனிடம், எமன்கூடப் பயப்படுவானம், இந்த லோகத்திலும்சரி வேறெந்தலோகத்திலும்சரி, அந்தச் சக்தியின்முன்பு வேறெதுவும் தலைகாட்டாது, சார்."

இப்படிப்பலர் பலவிதமாகப்பேசிக் கொண்டனர், பார்த்திபன் சிறையிலிருந்துதப்பித்துக்கொண்டசெய்தியைக் குறித்து.

"இது ஒரு பிரமாதமில்லைசார்! 1909ம் வருஷமோ, பதினேராம்வருஷமோ சரியாகக் கவனமில்லை அப்போது, ஒரு அற்புதம்நடந்ததுசார், இதற்கு அப்பனுக. கைதியைக் கோர்ட்டிலேகொண்டுவந்து நிறுத்தினர்கள், நின்றஉடனே, பூகம்பம் போல ஒருமாதிரியாகஇருந்தது. கோர்ட்டிலேஇருந்தவர்கள், ஜட்ஜ் உள்பட, பயந்து, ஓட்டமாகவெளியேஓடினர். கைதி, புன்சிரிப்புடன், கூண்டைவிட்டு வெளியேறினன்.ஜட்ஜின்மோட்டாரிலே உட்கார்ந்துகொண்டுதானே ஓட்டிக் கொண்டுபோய்விட்டான். இன்றுவரையிலே ஆள் அகப்படவில்லை, மோட்டாரும் கிடைக்கவில்லை" என்று ஒருவர் கூறினர். 'உங்களுக்கு எப்படித்தெரியும்?' என்றுகேட்டார் மற்றொருவர். நம்மநரசிம்மாச்சாரியாரின் மருமகப்பிள்ளைதெரியுமோ, நாராயணமூர்த்தி அவருக்குக் குப்புசாமி ஜோதிடர்சொன்னராம்சார், குப்புசாம் சோதிடர்நேரிலே இதைப் பார்த்தாராம்" என்று அற்புதத்தை உரைத்தவர்கூற, சந்தேகி, "பேப்பரிலே இதுபோல வெளிவரவில்லையே" என்று சொல்ல, "வெளியேசொன்னல் வெட்கக்கேடுஎன்று, ஜட்ஜும் மற்றவர்களும் பேப்பர்காரர்களைக் கெஞ்சிக்கேட்டுக் கொண்டார்களாம் விஷயத்தை வெளிப்படுத்தவேண்டாம்என்று" எனப்பதில் கூறிச்சமாளித்தார்,கற்பனையைச்செய்தியாக வழங்கியபேர்வழி.

இவ்வண்ணமாகப் பலருடைய மூளைக்குத்தொல்லைகொடுத்த பார்த்திபன், "போலிசாம்,போலீஸ்!" என்றபோலீஸ் இலாக்காவைக்கேலிசெய்தபடி போக்குவண்டிகளிலே பிரயாணம்செய்துகொண்டிருந்தான், பட்டிக்காட்டான்போலமாறுவேடம்தரித்து! தன்னை நள்ளிரவிலே தப்பிச்செல்லுவதற்கு உதவிசெய்த காவலாளியின் குணுதிசயத்தைப் புகழ்ந்தான்! பணம்கிடைக்குமா கிடைக்காதா என்பதைக்கூட அவன் யோசிக்கவில்லையே, எவ்வளவு யோக்யன்என்று பாராட்டினன். அவனுக்கு எத்தனை ஆயிரம் கொடுத்தாலும்தகும் என்றுநினைத்தான். மாறுவேடம் போட்டுக்கொள்வதிலும், துப்பறிபவர்களை ஏய்ப்பதிலும் தனக்கு இருக்கும் சாமர்த்தியத்தால், கடைசிவரை ஆபத்தின்றிக்காலந்தள்ளிவிடமுடியும் என்றும் நம்பினன். சிறையிலிருந்து, எதிர்பாராதவிதமாக ஒரு காவற்காரனின் கருணையினல் வெளியேவரும் அதிர்ஷ்டம்தனக்குஇருக்கும்போது,யார்தான் என்ன செய்யமுடியும் என்றுஎண்ணிக்களித்தான். அவனுக்கு விடுதலையின் மூலம்மகிழ்ச்சிஅளித்த, துப்பறியும் பிரமநாயகம், அவனைப்பின்தொடர்ந்து, பல மாறுவேடங்களிலேவருவது பார்த்திபனுக்குத்தெரியாது (தொடரும்.)

---

## ஈரோட்டில் இராமநாதன்.

கோவை மாவட்டத் திராவிடர் கழக ஆண்டுவிழா, ஈரோடு, சரசுவதி மண்டபத்தில் 2-ந்தேதி மாலை தோழர் C. N. அண்ணதுரை தலைமையில் நடைபெற்றது. அதுபோது (மாஜிமந்திரி) தோழர் S. இராமநாதன் அவர்கள் ,காந்தீயத்தின் கேடுகளை விளக்கியும், திராவிடநாடு தனி நாடாக அமைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், ஆழ்ந்த கருத்துடைய சொற்பொழி வாற்றினர். குடந்தை மாணவர் இயக்கத் தோழர் தவமணிராசன் திராவிடரின் நிலைமைபற்றிப்பேசினர்.

விழாஆரம்பத்தில், கோவைமாவட்டத் திராவிட கழகத் தலைவர் தோழர்அர்ஜுனன் அவர்கள் ஆண்டு அறிக்கை வாசித்து, தோழர் இராமநாதன் அவர்களைத் திராவிட இயக்கத்தில் ஈடுபட்டுப் பணிபுரியுமாறு கேட்டுக் கொண்டார்.

தோழர் S, V. லிங்கம், நன்றி கூறுகையில், தோழர் இராமநாதன் அவர்கள், திராவிடரின் விடுதலைக்குப் பணிபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

---


நன்றி:—"புறுமார்க்" திருச்சி.



# காஞ்சி திராவிடர் கழகம். இசை விழா!

(கழகக் கட்டிட உதவி நிதிக்காக)

## 4—1—45 வியாழன்

1. இசைக் கவிவர்ணர், தமிழ்ச் சங்கீத வித்வான்
மதுரை திரு: மாரியப்ப சுவாமிகள் ... ... ... பாட்டு
மதுரை திரு: வேலுசாமி அவர்கள் ... ... ... ஹார்மோனியம்
மாயவரம் திரு: நடராச சுந்தரம் அவர்கள் ... ... மிருதங்கம்

2. திருவாவடுதுறை ஆதீன நாதஸ்வர வித்வான்
(கக்காயி) திரு: T. N. R. நடராச சுந்தரம் அவர்கள் ... ... நாதஸ்வரம்
அபிநவ நந்தீசர், தவுல் அரசு, நீடாமங்கலம்
திரு: N. T. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ... ... )
நீடாமங்கலம் N. T. M. ஷண்முகவடிவேல் அவர்கள் ... ) தவுல்

## 5—1—45 வெள்ளி

3. ஸங்கீத வித்வபூஷணிகள், தஞ்சை
லக்ஷ்மி, கௌரி சகோதரிகள் ... ... ... பாட்டு
திருவீழிமிழலை, திரு: சுப்பிரமணியம் அவர்கள் ... ... பிடில்
தஞ்சை, திரு: இராமமூர்த்தி அவர்கள் ... ... மிருதங்கம்

4. திருப்பாம்பரம் சங்கீத வித்வான்
திரு: T. N. சுவாமிநாதன் அவர்கள் ... ... ... புல்லாங்குழல்
மாயவரம் வித்வான் திரு: கோவிந்தராஜு அவர்கள் ... ... பிடில்
குற்றாலம் வித்வான் திரு: சிவவடிவேல் அவர்கள் ... ... மிருதங்கம்

## 6—1—45 சனி

5. நாச்சியார் கோயில் வித்வான்
திரு: ரங்கசாமி அவர்கள் ... ... ... பாட்டு
மாயவரம் வித்வான் திரு: பாலு அவர்கள் ... ... பிடில்
காஞ்சி, திரு: முனுசாமி (ஆபீலா) அவர்கள் ... ... மிருதங்கம்

6. சங்கீத வித்வபூஷணி சாட்டியக்குடி
மீனாட்சிசுந்தராம்மாள் அவர்கள் ... ... பாட்டு
திருவீழிமிழலை வித்வான் திரு: சுப்பிரமணியம் அவர்கள் ... பிடில்
புதுக்கோட்டை வித்வ திலகம்
ரெங்கநாயகி அம்மாள் அவர்கள் ... ... மிருதங்கம்

7. குழிக்கரை, அவையானந்த அருட்பெருஞ் செல்வ வித்வான்
திரு: K. S. பிச்சையப்பா அவர்கள் ... ... நாதஸ்வரம்
யாழ்ப்பாணம், வித்வான் திரு: சண்முகசுந்தரம் அவர்கள் ... )
குழிக்கரை வித்வான் திரு: V. பக்கிரிசாமி அவர்கள் ... ) தவுல்

## 7—1—45 ஞாயிறு

8. திருவாரூர் சங்கீத வித்வான்
திரு: T. V. நமசிவாயம் அவர்கள் ... ... பாட்டு
கும்பகோணம், வித்வான் திரு: சிவவடிவேல் அவர்கள் ... பிடில்

9. தஞ்சை, சங்கீத வித்வான்
திரு: T. M. தியாகராசன் அவர்கள் ... ... பாட்டு
மாயவரம் வித்வான் திரு: G. பாலு அவர்கள் ... ... பிடில்
தஞ்சை வித்வான் திரு: மகாலிங்கம் அவர்கள் ... ... மிருதங்கம்

## 8—1—45 திங்கள்

10. தமிழ் இன்னிசைப் பிரயோகர்
சிதம்பரம், திரு: ஜெயராம் அவர்கள் ... ... பாட்டு
தஞ்சை வித்வான் திரு: சந்தானமய்யா அவர்கள் ... ... பிடில்
காரைக்கால் வித்வான் திரு: பாலு அவர்கள் ... ... மிருதங்கம்

11. அகில உலக நாதஸ்வர ஏகசக்ராதிபதி திருவாவடுதுறை
திரு. T. N. இராஜரத்தினம் அவர்கள் ... ... நாதஸ்வரம்
பாலநந்தீஸ்வர, லய, பூஷண, நாச்சியார் கோயில்
திரு: N. P. ராகவன் அவர்கள் ... ... )
திருவாவடுதுறை, திரு: சங்கரன் அவர்கள் ... ... ) தவுல்

---

**கட்டணம்:- சீஸன் டிக்கட் ரூபா. 10, 5, 3. பெண்களுக்கு ரூபா. 3, 2.**

குறிப்பு:— மற்றும் சில கச்சேரிகள் ஏற்பாடாகி வருகின்றன. அடுத்த வார அறிக்கையில் வெளியிடப்படும்.

இங்ஙனம்,
கே. எஸ். முனுசாமி, தலைவர்.
டி. பி. எஸ். பொன்னப்பா, காரியதரிசி.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.